ஓம்

# ஹரிஜன்

[எல்லாரும் ஓர் குலம் என்ற உணர்ச்சியைத் தூண்டும் சிறந்த சமயோக நாடகம்]

இயற்றியவர் :

கவியோகி சுத்தானந்த பாரதியார்



வெளியீடு :

தமிழ்நாடு ஹரிஜன சேவக் சங்கம்

சென்னை.

1966

ஓம்

# ஹரிஜன்

(நாடகம்)

❋

கவியோகி சுத்தானந்த பாரதியார்
இயற்றியது.

வெளியீடு :
தமிழ்நாடு ஹரிஜன சேவக்சங்கம்
சென்னை.

# HARIJAN

(Drama)

*By*

**Kavi Yogi Shuddhananda Bharati**

YOGA SAMAJ

Adyar, Madras-20.

*All Rights Reserved,*

*Published by*

TAMILNADU HARIJAN SEVAK SANGAM

MADRAS.

1966

Shuddhananda Press, Adyar, Madras-20.

# ஹரிஜன்

(நாடகம்.)

## முன்னுரை

இந்தியா முன்னேறுகிறது; நமது சமுதாயம் புது மலர்ச்சி பெற்றது. ஏழு கோடி மக்களைத் தீண்டாதவர் என்ற காலம் போய்விட்டது; தீண்டாதே, பாராதே, வராதே என்றவர்கள் இன்று கோவிலில் சரிசமனாகத் தொழுகின்றனர்; கல்விக்கற்று முன்னேறுகின்றனர்; சட்ட சபையில் அங்கம் வகிக்கின்றனர்; மந்திரியாகி நாட்டை ஆளுகின்றனர். அமெரிக்காவில் அபிரஹாம் லிங்கனும், புக்கர் வாஷிங்டனும் தொடங்கிய சமரச இயக்கம் இன்றும் வெற்றிபெறவில்லை. மார்டின் கிங் இன்னும் காந்திவழியே போராடிக் கொண்டிருக்கிறார். நமது நாட்டில் நந்தனார், திருப்பாணாழ்வார் காலந்தொட்டு வந்த இயக்கம் இன்று வெற்றிகண்டது. இன்று திருக்குலத்தார் சரிநிகர் சமானராகக் கல்வி கற்று முன்னேறுகின்றனர். இதன் பெருமை யாரைச் சேரும்? ஒரே ஒருவரையே சேரும். அவரே, மஹாத்மாகாந்தி! பாரத நாடு இன்று பெற்ற நன்மைகளெல்லாம் நமது நாட்டுத் தந்தையின் ஆசியால் வந்தன. மஹாத்மாவின் சத்திய சோதனையும், சாந்தப் போரும் நேடாலில் தொடங்கின. அங்கும் ஒரு தண்டி யாத்திரை நடந்தது. இந்தியரை இழிவு செய்த கறுப்புச் சட்டத்தைத் தகர்த்த காந்தியடிகள் இந்திய மக்களின் அடிமை விலங்கை முறிக்கவே இங்கும் ஒரு தண்டி யாத்திரை செய்தார். மஹாத்மாகாந்தி எத்தனையோ அற்புதத் தொண்டுகளைச் செய்தார். அவற்றுள் ஹரிஜன முன்னேற்றத்தை முதன்மையாகக் கருதுவோம்.

1915-ல் மதுரைக்கு வந்தார் மஹாத்மா; ஜார்ஜ் ஜோஸஃப் வீட்டில் அவரைக் கண்டேன்.

ஒன்ருக வாழ்வோம்
நன்ருக வாழ்வோம்
உலகம் ஒருகுலமே — அதில்
ஒற்றுமையே பலமே!

என்றொருப் பாட்டைப் பாடினேன். அருகே ஒரு தோட்டி தெருவைக் கூட்டினுன், அவன் குழந்தை மண்ணில் விளையாடியது. "உன் பாட்டை அந்த பங்கியிடம் பாடு" என்ருர். பாடினேன்; அவனுக்குக் கருத்து விளங்கியது. "அப்படியாஞல் நல்ல பாட்டுத்தான். கவிகள் சாதாரண மக்களுக்குப் புதிய விழிப்பு வரும்படி எளிய நடையில் பாடவேண்டும், பேசவேண்டும், எழுதவேண்டும்" என்ருர் காந்தி. பிறகு மண்ணில் விளையாடும் குழந்தையைச் சுத்தம் செய்துவரச் சொன்ஞர். அவ்வாறே அதற்கு எண்ணெய் தேய்த்துக் குளிப்பாட்டிப் புதிய துண்டை உடுத்திக் கொணர்ந்தேன். "இதுதான் நல்ல தொண்டு; தாழ்த்தப்பட்டவர் உயர வேண்டும். மண்ணில் புரண்டு தூசி படிந்த உடல்களைக் கழுவ வேண்டும்." என்ருர். இச்சமயம் A. வைத்தி நாத ஐயர் வந்தார். எல்லாரும் கலந்து பேசினர். அதன் முடிவு இதுவே :—

"உரிமைப்போர் உள்ளும் புறமும் நடக்க வேண்டும். உட்போர் நமது சமுதாயத்தின் மேடு பள்ளங்களை நீவிச் சமநிலையை நாட்டும். புறப்போர் அன்னிய மாயத்தை ஓட்டி அன்பை நாட்டி, விடுதலை தரும். தீண்டாமையை விலக்கித் தாழ்த்தப்பட்டவரை உயர்த்துவது உட்போரில் முதன்மையானது. தாழ்த்தப்பட்டவரை நான் ஹரிஜனர் என்கிறேன். நமக்காக வயல் வரப்புகளிற் பாடுபட்டு, ஊர் சுத்தம் செய்பவரை ஒதுக்கி வைப்பது கொடுமையாகும். "ஒதுக்கி வைத்தவர் வாழ்வை இனிப் புதுக்கி வைப்போம்." என்ருர் மஹாத்மா. அன்றே ஹரிஜன இயக்கம் எழுந்தது. மதுரையில் A. வைத்தி நாதரும், N.M.R. சுப்புராமரும் செய்த ஹரிஜன சேவை சரித்திரப் புகழ் பெற்றது அந்தக் காலத்தில் சிவகங்கையில் நான் சேரியில் பள்ளிக்கூடம் தொடங்

கினேன் (1916): ஆசிரியராயிருந்தபோது ஸ்ரீராம சமுத்திரத்தில் ஹரிஜன சங்கமும் பள்ளிக்கூடமும் நடத்தினேன். பாமணியில் கிராமசேவை செய்தபோது பெரிய மிராசுதார்களும் ஹரிஜனரும் ஒன்றாகக்கூடி வழிபாடுகள் செய்யவும், பஜனை செய்யவும், உண்ணவும் ஏற்பாடு செய்தேன். மஹாத்மா காந்தி என்னை ஆக்கப்பணிகளில் ஊக்கி நடத்தினார்.

அந்தக் காலம் கிராம சேவைக்காக நான் பல நாடகங்கள் நடத்தினேன். அவற்றுள் ஒன்று "ஹரிஜன்" என்ற இந்த நாடகம். இந்த நாடகத்தைச் செப்பனிட்டு, இக்காலத்திற் கேற்றபடி சில திருத்தங்கள் செய்தேன்.

மதுரையின் பொதுநலச் செம்மலான ஸ்ரீ N.M.R. சுப்புராமனின் அறுபதாண்டு விழாத் தலைமை தாங்கியபோது, இந்நாடகத்தைப் பற்றி அவர்களிடமும் ஸ்ரீ P. K. இராமாச்சாரியாரிடமும், ஸ்ரீ க. அருணாசலனாரிடமும் குறிப்பிட்டேன். இதை வெளியிடும் முயற்சியை அவர்கள் ஊக்கினார். இந்நாடகத்தை ஹரிஜன ரக்ஷகரான மஹாத்மா காந்திக்கு அர்ப்பணிக்கிறேன்.

சுத்தானந்த பாரதி

# - நாடக பாத்திரர் -

★

1. ஜெயராமன் M.A. — ஹரிஜன சங்கத் தலைவன். தேசபக்தன்-காந்திபக்தன்.

2. கைலாசபட்டர் — ஜயராமன் தந்தை - வைதீகப் பழம்.

3. கனபாடிகள் — வேதம் படித்தவர்; பழைய ஆசாரக்காரர் - காலப்போக்கை அறியாதவர்.

4. வேதவல்லி — கனபாடிகள் மகள் - படித்த பெண். ஜயராமனைக் காதலிப்பவள். ஹரிஜன சேவகி.

5. நல்லாயி — திருக்குல மாது; பாடுபட்டுப் பிழைப்பவள்.

6. வீரமுத்து — அவள் மகன்; அறிவாளி; சமூகத் தொண்டன். டாக்டர் பட்டம் பெறுகிறான்.

7. வைத்திநாதர் — } தலைவர்.
8. N.M.R. சுப்புராமர் — }

9. கிறிஸ்தவ பாதிரியார்.

★

# கதைச் சுருக்கம்

மதுரையில் மஹாத்மா காந்தியின் ஆசியால் ஹரிஜன சங்கம் ஏற்படுகிறது ; A. வைத்திநாத ஐயரும், N.M.R. சுப்புராமைய்யருமஅதைப் பாதுகாக்கிருர்கள். ஐயராமன் M.A. அதன் காரியதரிசியாகி சங்கத்தைப் பல துறைகளில் வளம் பெற வளர்க்கிருன். ஐயராமனுக்கு வேதவல்லி என்ற கன்னிப்பெண் துணை செய்கிருள். வேதவல்லி பள்ளிக் குழந்தைகளுக்கு, ஆடல், பாடல், நாடகம் பயிற்றுகிருள். ஐயராமன் ஆதாரப் பள்ளிக்கூடம் நாட்டி, நூறு ஹரிஜன மாணவருக்குத் தொழில் முறைக் கல்வி பயிற்றுகிருன். நூற்பு, நெசவு காயிதம், பைண்டிங், அச்சு, மரவேலை, தோட்டப்பயிர் முதலிய பல தொழில்களால் சங்கத்தை வளப்படுத்துகிருன்.

ஐயராமன் தந்தை கைலாசப்பட்டர்; வேதவல்லி தந்தை கனபாடிகள் — இருவரும் மீனாக்ஷி சுந்தரேசர் கோவில் பூஜை செய்பவர். ஐயராமன் — வேதவல்லியின் ஹரிஜன சேவை இவர்களுக்குப் பிடிக்கவில்லை. இருவரும் இருவருக்கும் தடை போடுகிருர்கள். பழைய வர்ண தர்மத்தையே பேசுகிருர்கள். கனபாடிகள் வேதவல்லியைப் பலமாகக் கண்டிக்கிருர். பெண்கள் பேசக்கூடாது என்கிருர் - ஆனால் ஐயராமனும், வேதவல்லியும் ஹரிஜன சேவையில் தீவிரப்படுகின்றனர். எவ்வளவு முயன்றும் தீண்டாமைப் பேய் ஒழியவில்லை. ஹரிஜனர் சிறுமை தீரவில்லை.

மீனாட்சி கோவிலில் பூஜை தீபாராதனை நடக்கிறது. சந்நிதித் தெருவில் சில ஹரிஜனர் நின்று, சந்நிதி விளக்கைப் பார்த்துக் கும்பிடுகின்றனர். அவர்களுள் அதோ விறகு சுமந்து நிற்பவள் நல்லாயி. அவள் மகன் வீரமுத்து. கோவிலுக்குள் போவோரைக் கூர்ந்து பார்க்கிருன். தானும் போகத் துடிக்கிருன். நல்லாயி "நாமெல்லாம் தீண்டாச்

சாதி; உள்ளே போனால் உதைப்பார்'' என்கிறாள். ''அம்மா நான் ஒருநாள் மீனாட்சியம்மனைப் பார்த்தே தீருவேன்" என்று பையன் சபதம் கூறுகிறான். அப்போது ஒரு பாதிரி மதம் மாறும்படி வேண்டுகிறான். நல்லாயி மறுக்கிறாள். நல்லாயி விறகு விலை கூறிக்கொண்டு ஆவணி மூல வீதிக்கு வருகிறாள்.

அப்போது தான் பட்டரும், கனபாடிகளும் கலி காலத்தைத் தூற்றுகின்றனர். ஜயராமனைத் திட்டுகின்றனர். ஜயராமனுக்குத் தன் பெண்ணைக் கொடுக்க மறுக்கிறார் கனபாடி. இந்த விவாவதம் நடக்கும்போது. நல்லாயி விறகு சுமந்து வருகிறாள். பட்டர் அவளைத் தள்ளி நிற்கச் சொல்லி, அவள் தந்த சில்லரையைக் கழுவியெடுத்துச் சிறுமை செய்கிறார். ஜயராமன் அவரைக் கண்டித்து, நல்லாயிக்கு உணவுதந்து வீரப்பனை ஹரிஜனப்பள்ளியிலும் சேர்த்து ஆதரிக்கிறான். வீரப்பன் பட் பட் என்று பதில் சொல்லி பட்டர் வாயை அடக்குகிறான். பட்டரும் கனபாடிகளும் சங்கத்தைக் கவனிக்கிறார்கள்.

ஹரிஜன சங்கத்தில் காந்தித் திருநாள் நடக்கிறது. வேதவல்லி குழந்தைகளுடன் காந்தித் தாத்தா பாட்டுப் பாடுகிறாள். குழந்தைகள் அதற்கேற்ற வேடம் பூண்டு ஆடுகின்றனர். பிறகு ஒற்றுமைப் பாட்டுப் பாடுகின்றனர். பட்டர் உள்ளம் காந்தியிடம் பதிகிறது. கனபாடிகளிடம் மாறுதல் ஏற்படுகிறது. ஆயினும் பழம் பிடிவாதம் விடவில்லை.

வைத்திநாதர், சுப்புராமன், ஜயராமன் மூவரும் மீனாட்சி கோவிலில் ஹரிஜனப் பிரவேசம் செய்கின்றனர். தை வெள்ளிக்கிழமை. சங்க நாதத்துடன் தேவாரம் பாடிக்கொண்டு ஆசாரமாக ஹரிஜனர் கோவிலுட் செல்லுகின்றனர். பட்டரும் கனபாடிகளும் மீனாட்சியை வழிபட்டு ''தாயே தீண்டாதாரை உள்ளே விடுவது அக்கிரமம். அதைத் தடுக்க வேண்டும்'' என்று முறையிடுதல். மீனாக்ஷி அசரீரியாய் ''என் குழந்தைகளை யெல்லாம் உள்ளே வரச் சொல்'' என்கிறான். வைத்திநாதரும், சுப்புராமனும் ஹரி

ஜனரைக் கோவிலுக்குள் அமைதியாக அழைத்துச் செல்லு கின்றனர். ஞானசம்பந்தரின் "வீடலாலவாயிலாய்" பாடி வீர நடைபோட்டு உள்ளே சென்று பரவசமாகப் பாடி வணங்குகின்றனர் திருக்குலத்தார். நல்லாயி பேரின்ப மடைகிருள். வீரமுத்து சபதம் நிறைவேறியதென்று களிதுள்ளுகிருன். மற்ருெரு சபதம் நிறைவேற அவன் டாக்டருக்குப் படிக்கிருன்.

மீனுட்சி மண்டபத்தில் வேதவல்லி ஹரிஜனக் குழந்தை களுடன் கும்மி கோலாட்டம் நடத்துகிருள். அந்தப் பாடல் எல்லார் உள்ளத்தையும் உருக்குகிறது. நாடெங்கும் ஹரிஜன ஆலயப் பிரவேசத்தைப் போற்றுகிறது.

ஆனல் கனபாடிகளின் முரட்டு மூளை "ஹாஹா" என்று கிளம்பி வெறி பிடிக்கிறது. "நானே மீனுட்சி, நான் கோவிலைவிட்டுப் போகிறேன்" என்று குமுறுகிருர். அவ ருக்கு மூளைநோய் காண்கிறது. கீழே விழுந்து கை முறி கிறது. பட்டருக்கும் இரத்தக் கொதிப்பு — இருவரும் நரக வேதனைப்படுகிருர்கள். டாக்டர் மாத்யூ இதற்குள் பார்த்து கைவிட்டுச் செல்கிருர். வீரமுத்து டாக்டர் பட்டம் பெற்று, மதுரை ஜில்லா மருத்துவ அதிகாரி யாகிருர். நல்லாயி பெருமகிழ்ச்சி யடைகிருள். கனபாடிகள் நோய் அதிகமா கிறது.

ஒருநாள் ஜயராமன் டாக்டர் வீரமுத்துவைக் கூட்டி வருகிருன். டாக்டர் கைக்குக் காயம்கட்டி, உடம்பில் ஒத்த டம் கொடுத்து, மூளைக்கும் சிகிச்சை செய்கிருர். இதே மாதிரி முன்னே டாக்டர் மாத்யூ சிகிச்சை செய்தார். அவர் ஹரிஜனயிருந்து கிறிஸ்துவரான பிறகு அக்கிரகாரத்திலும் சுதந்தரமாக வைத்தியம் செய்கிருர். இதை கனபாடி அறிவார். வீரமுத்துவை பட்டர் கண்டுபிடிக்கிருர். "அன்று விறகு தூக்கிவந்த நல்லாயி மகனு டாக்டர் வீரமுத்து" என்று வியக்கிருர். வீரமுத்துவின் அன்பு அவரை உருக்கு கிறது. மனதினின்று தீண்டாமைப் பேய் ஓடுகிறது.

கனபாடிகள் தன் மகள் வேதவல்லியை ஜயராமனுக்குத் திருமணம் செய்ய இணங்குகிருர். வேதமுத்துவே எல்லாச் செலவையும் செய்கிருன். டாக்டர் வேதமுத்து டாக்டர் தர்மாம்பாளை மணம் புரிகிருர்.

ஹரிஜன சங்கத்தில் திருமணம் மிகச் சிறப்பாக நடக்கிறது. கனபாடிகளும், பட்டரும் வாழ்த்துகின்றனர். எல்லாரும் ஹரிஜன் சேவையில் மகிழ்ச்சி கொள்ளுகின்றனர். வாழ்வு வளம் பெருகிறது. மானிடம் மாண்புறுகிறது.

— சுத்தானந்த பாரதியார்.



# ஹரிஜன்

(நாடகம்)

## காட்சி: 1. மீனாட்சி வழிபாடு

[மீனாட்சியம்மன் அழகான அலங்காரங்களுடன் விளங்குகிறாள். விளக்குகள் பளிச்சிடுகின்றன. பட்டர் அர்ச்சனை செய்து தீபாராதனை காட்டுகிறார்.]

[நாத நாமக்கிரியை-ஆதிதாளம்]

ஆதி பராசக்தியே
அன்னை மீனாட்சியே
ஜோதிச் சுடரொளியே
சுதந்தர வானமே!
மேதினிக் கோயிலில்
விளங்குயிர் வடிவமே
வேதத்தின் மெய்ப்பொருளே
வெற்றியருளுவையே!

வாழ்கநின் அன்பர் கூட்டம்
வாழ்கநின் ஆத்ம சக்தி
வாழ்க பாரத நாட்டின்
வளம் பெறுங்கலைகளே
வாழ்க சமயோக
வாழ்வு நலம் பெருகிச்
சூழ்க வுலகமெல்லாம்
சுத்த ஓம் சக்திநாதம்!

[தீபாராதனை—மணிச் சத்தம்—அன்பர் துதி]

மாதா பார்வதி ஓம் சரணம்
மதுராம்பிகையே ஓம் சரணம்
ஆதார சக்தி ஓம் சரணம்
அன்னை மீனாட்சி ஓம் சரணம்

## காட்சி : 2. நல்லாயி–வீரமுத்து

[தெருவில் ஜனக்கூட்டம். மீனாட்சி சந்நிதியில் தீபாராதனை தெரிகிறது; பாட்டு வருகிறது. நல்லாயி அப்படியே தெருவில் நிற்கிறாள். தலையில் விறகுக் கட்டு; கையில் மண்ணெண்ணைப் புட்டி, இடுப்பில் சாமான் கூடை. கந்தல் புடவை. பையன் வீரமுத்து பக்கத்தில் நிற்கிறான். அவன் இங்குமங்கும் கூர்ந்து நோக்குகிறான். எல்லாரும் கோவிலுக்குள் செல்லுகின்றனர்.]

நல்லாயி : தாயே மீனாட்சி, உன் தரிசனம் எப்போது கிடைக்குமோ! அம்மா பரதேவீ, எல்லோரும் கோவிலுக்குள்ளே போய் உன்னைத் தரிசிக்கிறார்களே–நாங்கள் மட்டும் என்ன பாபம் செய்தோம்...அம்மா...

வீரமுத்து : ஏனம்மா...எல்லாரும் உள்ளே போறாங்களே–நாமும் போவோமே ..

நான் போவேன் [முந்துதல்]

நல்லாயி : டே பயலே—போகாதே

வீரமுத்து : ஏனம்மா நாமும் மனிதரே...
நாமும் இந்த நாட்டிலே பிறந்தோம்
நாம் ஏன் கோவிலுக்குள்ளே போகக்கூடாது?

நல்லாயி : கூடாதுன்னா கூடாது

வீரமுத்து : ஏன் கூடாது?

நல்லாயி : நாம் தீண்டாச் சாதி

வீரமுத்து : அப்படீன்னா...

நல்லாயி : ஐயமாருங்க சாத்திரம் அப்படிச் சொல்லுது... நம்மை அவங்க தொடக் கூடாது; நாம் அவங்க கிட்டப் போகக்கூடாது.

வீரமுத்து : இவங்ககிட்டப் போக வேண்டாம்; சாமிகிட்டப் போனால் என்ன? மீனாட்சிக்கும் தீண்டாமை உண்டா?

நல்லாயி : சும்மா இருடா வாயாடி; அது நம்ம விதி!

வீரமுத்து : விதியைக் காலால் மிதி!
[விபூதி ருத்ராட்சம் தரித்த கனபாடிகள் முகத்தைச் சுளித்து].

கனபாடிகள் : டேடே. ஏ பிள்ளை, தீண்டாதேபோ, அப்புறம்!

வீரமுத்து : ஏனையா கோவிலுக்குள்ளேதான் போகக் கூடாது; தெருவிலும் நாங்கள் நிற்கக் கூடாதா...?

கனபாடிகள் : போடான்னு நாயே; அதிகப் பிரசங்கி, உதை விழும்....

நல்லாயி ; முத்து, பேசாதேப்பா; நாம் ஓரமாகப் போவோம்.

வீரமுத்து : அம்மா, இதே மீனாட்சி கோவிலுக்குள்ளே உன்னையும், நம்ம சனங்களையும் ஒருநாள் கூட்டிப் போகிறேன் பார்.

(வருதல் பாதிரி, பிடில் இழுத்து)

பாதிரி : லாலலல்லலலலலா
சேசுநாதரை நம்புங்கள்
சிலுவையைக் கும்பிடுங்கள்
லலலலலலலலா
பாவிகளுக்காக—ஆவியைத் தந்தாரே
லாலலலலலா
பரம பிதாவின் பரிசுத்தக் குமரன்
பகவான் ஏசுவை நம்புங்கள்.

அஞ்ஞானிகளே, வாருங்கள், ஞானஸ்நானம் பெறுங்கள்.

நல்லாயி : ஏனையா எங்களைப் பாவி, அஞ்ஞானி என்கிறீர். நாங்க ஒரு பாவமும் அறியோம்.

பாதிரி : ஏழையே; கல்லை கட்டையைத் தொழும் அஞ்ஞானிகளுடன் கூடாதே.

வீரமுத்து : உன் சிலுவை கட்டைதானே; அதைக் கும்பிடச் சொல்லுகிருயே. .

நல்லாயி : சீ அப்படிச் சொல்லாதே. அது தியாகத்தின் சின்னம். நாம் எந்த மதத்தையும் இகழக் கூடாது.

பாதிரி : ஏசுநாதர் பாவத்தைத் தீர்ப்பார், படிப்புத் தருவார், உணவு தருவார், வா என்னுடன். உன்னைத் தீண்டாதான் கோவிலுக்குள் வராதே என்கிருன். கிறிஸ்து அன்புடன் உன்னை வரவேற்கிருர். வா, வா அம்மா, வா தம்பி, சேர் எங்கள் மதத்தில்.

நல்லாயி : நான் ஏனையா உன் மதத்தில் சேருவேன் ? இந்துமதம் எங்கள் மதம்; காந்தியின் மதம் இந்து மதம். அதிலேதான் இருப்போம்.

பாதிரி : போ போ, தீண்டாதே என்கிருன்.

நல்லாயி : ஐயா தீண்டாமை நாளையே ஓடிப்போகும். பிறகு இந்துக்களெல்லாம் ஒரே குலமாக வாழ்வோம்.

பாதிரி : அஞ்ஞானியே, உன்னைப் பறையன் பள்ளன் சக்கிலி என்கிருனே.

நல்லாயி : ஐயா அதெல்லாம் அந்தக் காலம். இப்போது காந்தியுகம் நடக்கிறது. இராமானுஜர் எங்களை திருக்குலத்தார் என்ருர். காந்தி ஹரிஜனர் என்கிருர். எங்கள் குறை நீங்கும். மீனுட்சியை நாங்களும் தரிசிப்போம். சிவதரிசனம் செய்வோம்.

பாதிரி : மீனாட்சி, ஹஹஹ சிவம்...என்னுபேர்.
பரலோகத்தில் இருக்கும்
பரமபிதாவே கடவுள்

வீரமுத்து : கடவுள் பரலோகத்திலேதான் இருக்கிறரோ
இகலோகத்தில் இல்லையோ?
எங்கும் இருப்பார் கடவுள்
இதயத்தில் இருப்பார் கடவுள்

[பாதிரி பிடில் இழுத்துக் கொண்டே ஒரு துண்டுப் பிரசுரத்தைத் தந்து செல்லுகிறுன்.]

சேசுநாதரை நம்புங்கள்

வீரமுத்து : ஏனம்மா இதுவும்சரிதானே. நம்மை இவர்கள் இழிவு செய்கிறுர்களே நாம் கிறிஸ்துவராய் விட்டால் மரியாதையாயிருக்கலாமே.

நல்லாயி : அது பிசகு தம்பி. நாம் என்றும் இந்துக்கள். நாம் மதம் மாறினுல் நம் நாட்டுக்கே கெடுதல். இப்படித்தான் நமது மதத்தை விட்ட கோடிக் கோடிப்பேர் நமக்கே விரோதிகளாய் விட்டார் கள். நம் வீட்டில் குப்பையிருந்தால் அதைக் கூட்டியெறியாமல் வீட்டையே விட்டுப் போவதா? தீண்டாமை நாளையே ஓடிப்போகும் ஆண்டவனை நம்பு. சிவனே, எங்கள் குறை தீர வேண்டும். உன்னுலே நாம் ஆளாக வேண் டும். இன்று கஞ்சிக் கடனைத் தீர்ப்போம். விறகு! விறகு! [போதல்]

## காட்சி : 3. கனபாடி, பட்டர், ஜயராமன்

[ஆவணி மூல வீதி. பட்டர் பாக்கு வெட்டியால் சீவல் நறுக்கிப் போட்டு, வெற்றிலையில் சுண்ணும்பு தடவியுண்டு மெல்லுகிறுர்.]

2

பட்டர்: கலிகாலம், கலிகாலம்; காலம் கெட்டே போனது [புகையிலை போட்டு] கலியுகம் இப்படி போனது இந்தப் பயல் வரட்டும் சொல்றேன்.

கனபாடிகள்: (கோபமாக வந்து) திமிர் ஏறிப்போனது. தள்ளிப் போனு எதிர்பேசுருன். சின்னப் பயல். கைலாசபட்டரே, கேட்டீரா செய்தி! ஹரிஜன சங்கமாம், காந்தியாம், சமதர்மமாம் கோவிலுக்குள் பள்ளுப்பறை நுழைவதாம். தீண்டாமைக்குச் சாவு மணியாம் சாதி ஒழிப்பாம்.

பட்டர்: கனபாடிகளே, எல்லாம் ராமாயணத்திலும் ஸ்காந்த புராணத்திலும் எழுதி வைத்த படியே நடக்கிறது. நாமெல்லாம் திரேதா யுகத்திலிருந்து பார்க்கிரேும், கலி நாடகம் நடக்கிறது.

கனபாடி: உன் பிள்ளை தானப்பா கலிசொரூபம். என் பெண் வேதவல்லியும் அவன் போலவே பேசுகிருள். இவளைப் படிக்க வைத்ததே பிசகு.

பட்டர்: [பொடிமட்டையைத் தட்டி உறுஞ்சி] சிவா சிவா (தும்முதல்) இந்தப் பயலுக்குக் கலியாணம்.

கனபாடிகள்: பட்டையை இப்படித்தா! [பட்டையுடன் பொடி உறுஞ்சல்:]

பட்டர்: அடபாவி, பட்டை முழுதும் மூக்கில் ஏறிவிட்டதா—?

கனபாடி: இதுதான் பூர்ண பூரகம், ரேசகம் வருதுபார்; அஸ்க்! இஸ்க்! இந்த வேதவல்லிக்குக் கலியாணம் இஸ்ஸ்க்! கலியாணம் உஸ்ஸ்! தை மாசம் இஸ்க்கு.

பட்டர்: சகுனமாகவில்லே; மூன்று தும்பல் மூதேவி

கனபாடி: இரண்டு தும்மல்

பட்டர்: இரண்டு. தும்மல் இராட்சசி;

கனபாடி: ஒரே தும்மல் ஹ-ஸ்-ஸ் க்!

பட்டர்: ஒரே தும்மல்-ஆண் உதவாக் கரை; பெண் ஓடு காலி.

கனபாடி: என் பெண்ணு! உன் பிள்ளேயைச் சொல்லு

பட்டர்: என் பிள்ளேயா! உன் பெண்ணேச் சொல்லு. உன் பெண்ணுக்கு ஹரிஜன சங்கத்தில் என்ன வேலே?

கனபாடி: எல்லாம் உன் பிள்ளே ஜயராமன் செய்த வேலே. இவளே P.U.C. படிக்கத் தூண்டியது அவன். அவள் ஊசி, இவன் நூல்.

பட்டர்: எல்லாம் கட்டிப் போட்டால் சரியாய்ப் போகும் குடும்பம் குழந்தை குட்டி வந்தால் அடங்கிப் போகும்.

கனபாடி: நம் பிழைப்பைக் கெடுக்கிருனே! இதுவரையில் அர்ச்சனே வரும்படி நம்மது. கற்பூரத் தட்டில் விழும் சில்லறை நம்மது. மடப்பள்ளி நம்மது. நம:ச்சிவாய என்று விபூதிதந்தால் நாலு பணம் கிடைத்தது. இப்போது எல்லாம் சீட்டு; கணக்கு; தமிழில் மந்திரமாம். இதராளும் சொல்லலாமாம். சீர்திருத்தமாம் கோவிலில் தீண்டாதாரை விடுவதாம். அபசாரம் அபசாரம் இந்த அபசாரக் கும்பலுக்கு உபசாரம் செய்வது அந்த வக்கீல். அவருக்கு வலது கை உன் பிள்ளே.

பட்டர்: உன் பெண்ணுங்கூடத்தான். ஹரிஜனப் பள்ளிக்கூடத்தில் அவள் பாட்டுச் சொல்லித்

தருகிருள். இதோ அலறுகிறது பார் பாட்டு
[பின்னே மைக்கில் பாட்டு வருகிறது]

ஆண்டவன் பொதுவே
ஆலயம் பொதுவே
அனைவரும் உள்ளே வாருங்கள்
அன்புடன் ஒன்ருய்ச் சேருங்கள்!

[வருதல் ஜயராமன்]

கனபாடி : சிறிதாவது பயமிருக்கிறதா-பாரும்!

ஜயராமன் : பயப்படும் காலம் போச்சுதடா!
பாரெல்லாம் ஒரு குலம் ஆச்சுதடா!
ஜயப்பறை கொட்டிக் குதித்திடுவோம்.
ஜனசக்தி தன்னை மதித்திடுவோம்!

கனபாடி : டே ஜயராமா என்னடா பாட்டு—வீடா உறவா வேலை வெட்டியா-எதுவும் இல்லை.

ஜயராமன் : உலகம் எல்லாம் என் வீடு
உயிர்கள் எல்லாம் என் உறவு
உலகுக்கு நன்மை என் வேலை
உள்ளந்தோறும் என் சாமி

கனபாடிகள் ; சரி சரி, ஏதோ கோளாறு; கைலாசம், பிடாரி கோவிலில் உடுக்கடித்து மந்திரம் போடு. இவன் மூளை நேராகட்டும்; பிறகு பெண்ணைக் கொடுப்போம்.

பட்டர் : இரும் கனபாடிகளே, என் விதி இப்படியானது. இந்தப் பாதகனுக்கு என் அர்ச்சனைப் பணமெல்லாம் கொட்டினேன். எம்மே தேறி எருமைக்கடா ஆனுன். டே ஜயராமா, ஊர் சிரிக்கிறதே! எங்கே திரிகிருயடா! நாம் என்ன ஜாதி, என்ன குலம்!

ஜயராமன் : மனிதச் சாதி நாமெல்லாம்
மற்ளெரு சாதி இல்லையடா!
புனிதக் காந்தியின் குலமே
புரிவதெல்லாம் பொது நலமே!

கனபாடி : இங்கேதான் பைத்தியம் முற்றிவிட்டது. அப்பா, ஏற்றத் தாழ்வில்லாமல் இப்படிப் பேசத்தான் உன் அப்பன் பாடுபட்டுப் படிக்க வைத்தானே?

ஜயராமன் : ஏற்றத் தாழ்வைப் பேசாதே
ஏகமாய் வாழக் கூசாதே
காற்றைப் போலே கட்டற்றோம்
கலந்து வாழ முற்பட்டோம்.

Co-existence, emotional Integration என்று நேரு சொல்லுகிறரே. தெரியுமா? தீண்டாமை இந்து சமுதாயப் பீடை என்கிறரே காந்தி, தெரியுமா?

பட்டர் : அடமுட்டாள்! அவனெல்லாம் பணம் வைத்துக் கொண்டு பேசுருன். இங்கேயும் ஒரு வக்கீலை யர் பள்ளன், பறையன் எல்லாம் கோவிலுக் குள்ளே போக வேண்டும் என்கிருர். இன் னெரு பணக்காரர் கீழ்ச் சாதிக்குச் சோறு போட்டு, படிக்கவைத்துக் கொம்பு சீவி விடு கிருர். ஹரிஜன், காங்கிரஸ், சீர்திருத்தம், கதர், காந்தி என்பதெல்லாம் நமது ஆசாரத் திற்கு விரோதம்; இதெல்லாம் விட்டுத்தொலை. ஒரு பெண்ணைக் கட்டிக்கோ; குடித்தனம் செய்; குழந்தை குட்டி பெறு; நாலு பேர் மதிக்க நட. பணமில்லாதவன் பிணம்; வெறுங்கை முழம்போடுமா? அவர்கள் சம்பா தித்து வைத்துக் கொண்டு சமரஸம் பேசு கிருர்கள். ஊரில் வசூலித்து, காரில் சுற்றி,

ஓட்டு வாங்கி நாட்டைக் கலக்குகிருர்கள். உன்னை யாரடா மதிப்பார்?

ஜயராமன் : அப்பா சமூக தியாகிகளை, தேசபக்தர்களை, பொது நல வீரர்களை அவ்வளவு இழிவாகவா நினைத்தாய்? தியாக சீலர்களை அலட்சிய மாகப் பேசாதே. வைத்திநாதையர் தமது வக்கீல் வரும்படியெல்லாம் ஹரிஜன முன் னேற்றத்திற்கும் தேசபக்தருக்கும் தருகிருர். சுப்பராமன் தன் செல்வத்தையே செலவிட்டு ஹரிஜனருக்குக் கல்வியும் தொழிலும், முன் னேற்றமும் தருகிருர். இருவரும் புண்ணிய புருஷர். மஹாத்மாவின் ஆசிபெற்றவர்கள்.

கனபாடிகள் : மூடுவாயை—இவர்களுக்கு என்ன வேலை? பள்ளுப் பறைகளைத் தூண்டி விடறது; கோவிலுக்குள்ளே தீண்டாச் சாதியைக் கொண்டு போறது! வைதிகரான எங்களைத் திட்டறது; மேடைமேல் வார்த்தையைக் கொட்டறது! பத்திரிகையில் பெயரைப் போடறது. இங்கு மங்கும் ஓடறது; பேர்புகழ் தேடறது. கூட்டம் கூடறது!

ஜயராமன் : திருவாயை மூடறது! காலமறியாத கசண்டுப் பேச்சு! கனபாடிகளே, கேளுங்கள். நான் கேட்பதற்குப் பதில் சொல்லுங்கள். நமது நாடு இந்தியா; இந்த நாட்டில் பிறந்தவர் இந்தியர்; இந்தியர் ஒரு குலம், ஓரினம்; நாமெல்லாம் ஒற்றுமையாக வாழவேண்டுமா? அல்லது வேற்றுமைக் கந்தலாகி அழிய வேண்டுமா?

பட்டர் : ஒற்றுமை நல்லதுதானப்பா. ஆனல் 5 விரலும் வேற்றுமை தானப்பா. குரலுக்குக் குரல் வித்தி யாசம் உண்டப்பா.

ஜயராமன் : விரலுக்கு விரல் உண்டு வேற்றுமை—நல்ல
வேலை செய்தாலுண்டு ஒற்றுமை
குரலுக்குக் குரலுண்டு வேற்றுமை—பாட்டிற்
கூடிக் குழைந்திடின் ஒற்றுமை

பட்டர் : பழத்துக்குப் பழம் வேற்றுமைதானே.மாம்பழம் ஒரு சுவை, பலாப்பழம் ஒரு சுவை, வாழை ஒரு சுவை. இதோர் அழகு, அதோர் அழகு.

ஜயராமன் : பழத்துக்குப் பழம் உண்டு வேற்றுமை
பஞ்சாமிர்தத்திலே ஒற்றுமை
அழகுக்கு அழகுண்டு வேற்றுமை
அன்புத் துடிப்பிலே ஒற்றுமை.

அப்பா, உலகில் ஒன்றைப் போல் ஒன்று இராது; மரங்கள் பல, ஆனல் தோட்டம் ஒன்று; துறைகள் பல கடல் ஒன்று; உடல்கள் பல, உயிர் ஒன்று; பான்மை பல, பசிதாகம் ஒன்று; அடிப்படையான ஒற்றுமையைக் கருதி நாமெல்லாம் ஒரு குல மாந்தராவோம்.

கனபாடி : டே ஜயராமா, வேதாத்யயனம் பண்ணி, கனம் சொல்லும் நானும் அந்த மாடறுக்கும் மாசாணமும் ஒன்ரு?

பட்டர் : பிராமணோத்தமரான நாமும், சந்தி ஜப மில்லாத அந்த நீசரும் ஒன்ரு? அவர்களைக் கோவிலுக்குள் விடுவதா?

ஜயராமன் : மாட்டுத் தோல் செருப்பைப் போட்டு நடக்கிருயே. கோவிலுக்குள் பூனை, எலி புகவில்லையா; அதைவிட மனிதன் இழிவா அப்பா! பிராமணர் எத்தனைபேர் வேதம் படித்து சந்தி ஜபம், ஓமம், செய்பவர்? முதலில் நீ ஒழுங்காக மூன்று வேளை சந்தியாவந்தனம் செய்கிருயா? பிராணுயாமம் செய்கிருயா? மந்திரம் முணு

முணுக்கும் போதே மனம் சந்தைக் கடையில் சாமான் வாங்குகிறதே!

பட்டர்: நமது மனசு அடங்காவிட்டால் வேத சாஸ்திரங்கள் என்ன செய்யுமப்பா? பகவான் வால்மீகி இராமாயணத்திலே கலிகாலத்திலே இன்னது இப்படி நடக்கும் என்று சொல்லுகிருர்: வர்ணதர்மம் இருக்காது; வாயாடித்தனம் அதிகமாகும்; சாதிக்குழப்பம் வரும்; பெண்டுகள் பேசுவர்; நடத்தை கெடும்; பாபம் பெருகும் என்றெல்லாம் சொல்லியிருக்கிருர். அதன்படியே நடக்கிறது.

கனபாடிகள்: சுருக்கமாகச் சொல்லு கைலாசம்; கலிதர்பார் நடக்கிறது; பெண்கள் பிரசங்கம் பண்ணறது; பதினெட்டுச் சாதியும் கலந்து சாப்படறது. அப்பனைப் பிள்ளை அடக்குறது. கண்கண்ட இடத்திலே போறது; காதல் மணம் பண்ணறது. கோவிலிலே பஞ்சமர் நுழையிறது; எல்லாம் கலிகாலக் கோலம்.

ஜயராமன்: ஐயா, காலம் முன்னேறுகிறது; கண்கள் விழித்தன; சாதியுகத்திற்குச் சாவுமணி அடித்தோம்; சோதியுகம் புலர்ந்தது. நன்ருகச் சிந்தித்துப் பாருங்கள்; இந்துக்கள் நம்மவர்; எல்லாருக்கும் பசிதாகம், ஒன்று; உயிரன்பு ஒன்று. பஞ்சமர் என்று ஏழு கோடிப் பேர்களை நாம் சேரியில் ஒதுக்கிஞேம்; அன்னிய மதங்களில் புகுந்து அவர்கள் நமக்கே பகையாயினர். சேரிச் சாம்பான் டாக்டர் ஜான் ஆனுல் மரியாதை செய்கிருேம். தீண்டாமை என்ற பேயால் நாம் கெட்டோம். நமது வயல் வரப்புகளில் உழைப்பவர் யார்? ஊரைச் சுத்தம் செய்பவர் யார்? அவர்களை நாய் போல

நடத்துவதா கருணை? எல்லோரும் கடவுளைத் தொழத்தானே கோவில் உள்ளது; அதில் ஹரிஜனர் புகுந்தால் சாமி ஓடிப்போகுமா? நந்தனார் சிதம்பரம் கோவிலுட் புகுந்தாரே, நடராஜப் பெருமான் ஓடிப் போனாரா? ஸ்ரீரங்கத்தில் திருப்பாணாழ்வார் புகுந்தாரே? அரங்கநாதர் ஓடிப் போனாரா? கனகர் உடுப்பி கோவிலிற் புகுந்தாரே; கண்ணன் கனிவுடன் ஏற்றாரே. சங்கராசாரியாரின் மனிஷாபஞ்சகம் உங்களுக்குத் தெரியாதா?

"யத்ரயத்ர மனோ யாதி
ப்ரஹ்மணஸ் தத்ர தர்சனம்"

பார்க்குமிடமெல்லாம் பரமன் என்ற வாக்கு பொய்யா? பிராமணனுக்கு ஓருயிர்; ஹரிஜனுக்கு வேறுயிரா? இவனுக்கொரு நெஞ்சத் துடிப்பு, அவனுக்கொரு நெஞ்சத் துடிப்பா? இவனுக்கொரு கடவுள்; அவனுக்கொரு கடவுளா? கோவில் பூஜை வேதியன் செய்கிறான்; டங்கா, டமாரம், மிருதங்கம் முழங்குவது எதனால்? அவற்றின் தோல் யார் தருவது? கோவிலைக் கட்டினவன் யார்? சிலை வடித்தவன் யார்? கோவில் நிவேதனத்திற்கு நெல் விளைத்தவன் யார்? மேளக்காரர் யார்? இவர்கள் எல்லோரும் கோவிலிற் பங்கு கொண்டவரே. கடவுள் சந்நிதிமுன் எல்லோரும் ஒன்றே.

பட்டர்: முட்டாள்! ஹூம்! எம். ஏ. படித்து இப்படிப் பேசும் பிள்ளையை என்ன சொல்லுவது? கச்சேரிக்குப் போகும் மூளை சேரிக்குப் போகிறது! வேதியர் பிள்ளை சாதியை மறுக்கிறான். காலம் அப்படியானது! வம்பு வளர்கிறது. வசவு நமக்கு.

ஜயராமன் : போதும் அப்பா, நாளை காந்தி ஜயந்தி ; வா, சங்கத்திற்கு, குழந்தைகள் ஆடல் பாடல் மூலம் எங்கள் பணி நலத்தை அறிவாய்.

பட்டர் : தெரியுமடா உங்கள் பணி நலம். சுற்றிச் சுற்றி முடிவென்ன? ஆசிரம தர்மத்தை ஒழிக்கிறது; சனாதன தருமத்தை அழிக்கிறது; தீண்டா தாரைக் கோவிலுக்குள் நுழைக்கிறது; சாதி பாராது சாப்பிடுறது! இதுதான் ஆதியிலே, ஆதிகவி, வால்மீகி ராமாயணத்திலே சொன்னாரே. இன்னுமென்ன? இந்த அனாசாரத்தினாலேதான் அரிசி படி இரண்டு ரூபாயானது. ஆயுசு குறைந்தது.

ஜயராமன் :

மனித சமுதாயம் ஒன்றே—அதன்
மன்னவனான மனச்சாட்சி ஒன்றே
இனிய உலகமும் ஒன்றே—உல
கெங்கும் விளங்கும் இறைவனும் ஒன்றே
எல்லோரும் இன்புற வாரீர்—நாம்
எல்லோரும் எல்லார்க்கும்
இன்புற வாழ்வோம்!

இதுதான் எங்கள் பல்லவி.

உள்ளம் ஒன்றி உலகில் வாழ்வது
கள்ளம் இன்றிக் கலந்து வாழ்வது!

பட்டர் : பள்ளத்திலே விழுந்து பாழாவது! [உள்ளே மனைவி: அவனோடே என்ன வம்பு... அடுப்புக்கு விறகில்லை—உலைக்கு அரிசியில்லை. இங்கிதம் தெரியாத ஆண் பிள்ளைகள்... சாமான் வாங்கி வாரும்]

இது அவள் உத்தரவு.

கனபாடிகள் : எனக்கும் விறகு வேண்டும்.

ஜயராமன் : அதோ வருகிறான் விறகுக்காரி.

## காட்சி: 4. நாங்களும் மனிதரே

[நல்லாயி—வீரமுத்துடன் விறகு சுமந்து வருதல்]

நல்லாயி: விறகு! விறகு! வேலம் விறகு!

வீரமுத்து: நல்ல விறகு! காட்டு விறகு!

பட்டர்: ஏ விறகுக் கட்டை! விறகுக் கட்டை!

ஜயராமன்: விறகுக் கட்டையில்லை: அங்கே வருவது இரண்டு ஜீவன்கள்.

நல்லாயி: ஐயா புண்ணிய முண்டு; ஒரு விலை பேசி இறக்குங்க.

பட்டர்: விறகுக் கட்டை, நீ என்ன சாதி?

வீரமுத்து: காட்டு விறகுக் கட்டைக்குக்கூடச் சாதியா?

பட்டர்: டே, நீ தீண்டாச் சாதியா; கிட்ட வராதே, எட்டி நில்!

நல்லாயி: பட படக்கும் வெயில்; சுமை கனக்கிறது; தலை வலிக்கிறது; தெருத்தெருவாக அலைந்து கால் கடுக்கிறது. தெய்வமே, இன்றைக்குக் கஞ்சி கிடைக்குமா? விறகுப் பணத்திற்குக் கேப்பை வாங்கி, சுள்ளி பொறுக்கிக் கஞ்சி வைத்து நாலு பேர் பசியாற வேண்டும் ... ஐயா, நல்ல விறகு—

பட்டர்: அடீ எட்டி நின்று கத்து. என்ன சாதி?

ஜயராமன்: மனிதச் சாதி அவள் பெண். அவன் ஆண். நாமும் அப்படியே —

பட்டர்: தீண்டாச் சாதி! அதோ சாக்கடை ஓரத்திலிரு. அடீ, கிட்ட வராதே ...

நல்லாயி: நாங்களும் உன்னைப்போலச் சீவனையா; நாங்க ஹரிஜனர்.

வீரமுத்து : எங்களுக்கும் தன்மானமுண்டு; கடவுளுண்டு; கருணையுண்டு. ஏன் பாயிறீர்; தள்ளித்தானே நிற்கிறோம்.

பட்டர் : அட சுண்டைக்காய் பயலே – காங்கிரஸ்காரன் கற்றுக் கொடுத்தானோ? திமிராகப் பேசுகிறாய் – அங்கிருந்து பேசு, காசை வீசுகிறேன். என்ன விலை?

நல்லாயி : விதி, விதி! கதியுண்டோ கடவுளே! ஐயா, நல்ல விறகு — ஒரு ரூபா.

பட்டர் : அரை ரூபா.

கனபாடிகள் : கால் ரூபா.

வீரமுத்து : அநியாயம் வேண்டாமையா. வேகாத வெய்யிலிலே விறகு சுமந்து வந்தோம். இரக்கமில்லையா?

பட்டர் : சரி தொலை – முக்கால் ரூபா.

நல்லாயி : கூட நாலணாத்தானே ஐயா - ஏழை; இதை விற்று இந்தக் குடும்பம் பிழைக்க வேண்டும். ஒரு ரூபா உங்களுக்குப் பெரிதா – ஐயா – சரியான விலையே சொல்லுகிறேன்.

பட்டர் : முடியாது இரண்டணா குறை. தா இரண்டணா. இந்தா ஒரு ரூபா. (வீசி எறிதல்; அது சாக்கடையில் விழுகிறது.)

ஜயராமன் : என்னப்பா அநியாயம்! காட்டில் விறகுவெட்டி, இவ்வளவு தூரம் நீ நடந்துவந்தால் இப்படிச் செய்வாயா? சை, சை, என்ன கல்மனம்! நல்லாயி, இரு; நான் எடுத்துத் தருகிறேன். (எடுத்துத் தருதல்)

பட்டர் : சை, சை, சை, ... பிருஷ்டாள் ... கிட்டப் போகாதே... இரண்டணாவை அப்படி வைத்து

ஓட்டை ... கழுவி எடுக்கிறேன். தண்ணீர் கொண்டுவாடா ஜயராமா ...

ஜயராமன் : அப்பா, மனிதனை மனிதன் இப்படி நடத்தக் கூடாது. காலம் மாறியது.

பட்டர் : சீ சீ, போடா அந்தப்புறம்... தீண்டாதே! தீண்டாதே! (காசை கழுவுதல்)

வீரமுத்து : ஏய்யா நாங்க தந்த காசைக் கழுவி எடுக்கிறீங்களே - நாங்க போட்ட விறகையும் கழுவி எடுங்களேன் — விறகுமேலே விடுங்கள் தண்ணீர்!

ஜயராமன் : ஹ ஹ ஹ — சபாஷ் பயலே, (கிட்டச் சென்று தட்டிக்கொடுத்து) அப்பா, இந்தப் பையன் அழகாகப் பேசுகிறான்.

கனபாடிகள் : ஐயையோ, ஐயையோ - அவனை ஏனப்பா தொட்டாய் - போ சங்கற்பம் சொல்லி முழுகு - பூணூலை மாற்று; காயத்திரி ஜபி.

ஜயராமன் : கனபாடிகளே, இந்த ஏழைக் குழந்தையைத் தொட்டதற்காகவா? இந்தக் குழந்தையிடம் அன்பு பாராட்டியதற்காகவா? அன்பிற்கா தண்டனை? கனபாடிகளே, இதுகாறும் ஹரிஜன சகோதரர்களைக் கிட்டவராமல் ஒதுக்கிய பாபத்திற்காக நீரே மனம் வருந்திப் பரிகாரம் செய்ய வேண்டும். நல்லாயி, இந்தப் பையன் படிக்கிறானா?

நல்லாயி : படிக்கத்தான் துடிக்கிறான் - பள்ளிக்கூடத்துள்ளே வராதே என்று அங்கே ஒருவன் அடிக்கிறான் - படிப்பிலும் தீண்டாமை புகுந்து விட்டது...

வீரமுத்து : ஐயா நீங்க நல்லவர் ; நானும் எட்டு வருசமாகப் பார்க்கிறேன் ; எங்களை இவங்க படுத்தும் பாடு படுமோசம். பார்ப்பனர் மட்டுமா? மற்றச் சாதிகளும் எங்களைத் தீட்டுப் பண்டமாக்கி விட்டனர். சாதி எப்போது ஒழியுமோ !

பட்டர் : அதிகப்பிரசங்கி – போதும் பேச்சு ... தூக்குடா விறகை. ஐயராமா, வெய்யில் கொளுத்துகிறது, மிதியடி போட்டு வருகிறேன். (மிதியடி போட்டு நடக்கிறூர், தடுக்கி விழுகிறூர், மிதியடி பிய்ந்து போகிறது.) ஐயையோ – காயம் ! ஐயையோ மிதியடி விண்டுபோனது – சக்கிலிகிட்டத் தர வேண்டும்.

வீரமுத்து : மிதியடி தைக்கும் எங்களுக்கு மிதியும் அடியுமே மிச்சம். இப்போது யார் உமது மிதியடியைப் பழுது பார்ப்பது? தாரும் இங்கே —

கனபாடி : அது உன் வேலை. தோல்வேலை - உன் சுதர்மம்.

வீரமுத்து : நாங்கள் எங்கள் சுதர்மத்தைச் செய்கிறோம். நீங்கள் உங்கள் சுதர்மத்தைச் செய்கிறீர்கள். எங்களை இழிவு செய்வதேன்?

பட்டர் : நீங்கள் தீண்டாப் பிள்ளை ...

வீரமுத்து : (பாடி ஆடுகிறுன்)

யாரை நீர் தீண்டாதார் என்கிறீர் !
எவரை நீர் இழிவாகப் பேசுறீர் !
ஊரைக்கூட்டிச் சுத்தம் செய்யும் எம்மையா?
உயிரைக்காக்கும் பயிரைக்காக்கும் எம்மையா?

பாட்டாளி மக்களான எம்மையா?
பகலிரவாய்ப் பாடுபடும் எம்மையா?
கூட்டாளி மக்களான எம்மையா?
கூசாது தள்ளிப்போ என்னுவீர் !

தோலுரித்துச் செருப்புத்தைத்துத் தருகிறோம்
ஜோராகக் கிறிச்சுநடை போடுநீர்
வேலிகட்டித் தோட்டம்போட்டுத் தருகிறோம்
வெய்யிலுக்கு இளநீர் வெட்டிக்
கொடுக்கிறோம்

கண்விழித்துக் காவல்காக்கும் வீரர் நாம்
கஞ்சியுண்டு நாய்க்குடிலில் வாழ்கிறோம்
மண்ணிலத்தில் பொன்விளைக்கும் மன்னர் நாம்
மனிதரென்றே மதியாது பேசுநீர்.

பட்டர்: அட விசுக்கான்! எங்கே கற்ருய் இந்தப் பாட்டை! ஏடே கிட்டவராதே — ஆட்டம் போதும்.

ஜயராமன்: மெய்தானே அப்பா, இதெல்லாம் அன்புச்சாமி பாட்டு; ரேடியோவில் வருகிறதே, கேட்டதில்லையா? வீரமுத்து, நீ அறிவாளி; ஹரிஜன சங்கம் நடத்தும் பள்ளிக்கூடத்தில் படி.

நல்லாயி: ஐயா, இவன் நாலாள் வேலை செய்கிருன். இவன் வேலைசெய்து பிழைப்பு நடக்கிறது.

ஜயராமன்: நல்லாயி, பிள்ளை படிக்கட்டும். உனக்கும் சங்கத்தில் வேலை தருகிறோம்.

நல்லாயி: என் புருஷன், தோட்டவேலை பார்ப்பார்.

ஜயராமன்: எங்கள் தோட்டத்தைக் கவனிக்கட்டும்.

கனபாடிகள்: இப்படி நமக்குச் சொல்லுகிறவர் இல்லையே... அப்பா, எனக்கும் ஒரு வேலை தாயேன்...

ஜயராமன்: என்ன வேலை செய்வீர்?

கனபாடிகள்: கோவிலில் மணியடிப்பேன்; பஞ்சாங்கம் பார்ப்பேன்.

ஜயராமன் : கனபாடிகளே, காலம் மாறிப்போனது. உழைப்பவனுக்கே உணவு. மணியாட்டும்; மந்திரம் போடும்; ஆனால் வயிற்றுக்கு உழைத்தே தீர வேண்டும். உமக்கு ஒரு செய் நிலம் தருகிறோம்; காய்கறித் தோட்டம் போடுமே! பஞ்சு தருகிறோம்; நூல் நூற்றுத் தாருமே! சக்தியுள்ளது; கோதுமை உடையுமே! உடல் உழைப்பு வேண்டும். உலகம் உழைப்பகம்!

வீரமுத்து : அப்படிச் சொல்லுங்க ஐயா! எங்களைப்போலே நீங்களும் பாடுபடவேண்டும்.

கனபாடிகள் : நான் என்ன ஜாதி! இவன் என்ன ஜாதி! டே பயலே—போடா சேரிக்கு...

வீரமுத்து : ஐயா, நானும் மனித ஜாதி! நீரும் மனித ஜாதி! உள்ளே நானும் ஜோதி; நீரும் ஜோதி.

கனபாடி : அதிகப் பிரசங்கி; கோவில் பக்கம் வா, சொல்லுகிறேன்...

வீரமுத்து : ஐயா, நாங்க கோவிலுக்குள் வந்து மீனாட்சியம்மன் முன்னே நின்று கும்பிடும் காலம் இதோ வந்தது.

கனபாடி : இவர்களுக்கு படிப்பு வேறே; பள்ளிக்கூடம் வேறே.

வீரமுத்து : ஐயா நான் படித்து முன்னேறி உங்கள் வீட்டுக்குள் வந்து கைபார்க்கப் போகிறேன் — ஒருநாள்...

நல்லாயி : முத்து, திமிராகப் பேசாதே. வா ... போவோம்.

ஜயராமன் : நல்லாயி, நாளை வா சங்கத்திற்கு. காந்தி பிறந்த நாள் — நல்ல நாள்.

கனபாடி : கைலாசம், உன் பிள்ளையைக் கண்டி.

பட்டர் : உன் பெண்ணைக் கண்டி. இதோ, இவன் கிளம்பிவிட்டான்...

(வேதவல்லி தெருக்கோடியிலிருந்து ஜயராமனைப் பார்த்துச் சிரிக்கிறாள்.)

கனபாடி : அதோ அவளும் கிளம்பிவிட்டாள் — இரு ... காலை ஒடித்துவிடுகிறேன்.

(தொந்தியைத் தூக்கிக்கொண்டு ஓடுகிறார்.)

## காட்சி : 5. வேதவல்லி, கனபாடி

(வேதவல்லி P.U.C. புதுப்பண்பாட்டினள். படித்தவள்; காந்திபக்தை, இனிய பாடகி, ஹரிஜன சங்கத்தில் குழந்தைகளுக்கு ஆடல் பாடல் சொல்லித்தருபவள். தந்தை கனபாடிகளுக்கு விந்தையான விடை தருபவள்-ஜயராமன் காதலி. வேதவல்லி அழகான புடவை கட்டி, மலர் முடித்து, மஞ்சள் குங்குவமிட்ட மங்கல முகத்துடன் மலர் நகை குலுங்க, ஒரு பையுடன் வெளி வருகிறாள்.)

கனபாடி : ஹே ஹே! வேதம் எங்கே போகிறது?

வேதம் : வேதம் ஓதுவோரிடம் போகிறது!

கனபாடி : காலை நறுக்கிவிடுவேன்; போ வீட்டுக்குள்ளே. அந்தப் பயலுடன் என்ன உறவு — ?

வேதம் : பயலுடன் இல்லை. புயலுடன் – சமூகப் புயலுடன் மோதுவது எங்கள் வேலை...

கனபாடி : என்ன புயல்! இங்கே என்னைப் பார்த்துப் பேசு ... வைதிகன் வீட்டுப்பெண் - இப்படி—?

வேதம் : எப்படி அப்பா! வைதிகம் என்றால் என்ன?

கணபாடி : மடி ஆசாரம், எச்சல், தீண்டல் சாதி பார்த்து நடப்பது. தீண்டத்தகாதவரைத் தீண்டா திருப்பது.

வேதம் : ஆசாரம் எங்களுக்கும் உண்டு.
" அன்பாயிருப்பதே ஆசாரம்
அறிவாய் நடப்பதே ஆசாரம்
பண்பாடாவதே ஆசாரம்
பழுதறு நடையே ஆசாரம்."

கணபாடி : சரி, நீயும் ஜயராமனுனுய் – அதிகப் பிரசங்கி. நாக்கை அறுப்பேன் பேசினுல். பெண்கள் பேசலாமா? வீட்டைவிட்டு வெளியே வரலாமா? குனிந்த தலே நிமிரலாமா? குரலேத் திறக்க லாமா? பாடலாமா? ஆடலாமா? மேடையேற லாமா? உன் வயசென்ன? காரியமென்ன? தை பிறந்தால் கலியாணம்.

வேதம் : தினம் இந்த வாய்பாடுதான் ஒப்பிக்கிருய் – அப்பா. காலம் மாறிப்போனது. பெண்ணென் ருல் பொம்மையில்லே. வீட்டுக் கைதியில்லே. அடிமைத் தாதியில்லே. எங்கள் கண்ணேக்கட்டி அடிமை செய்த காலம் போய்விட்டது.

கண்கள் விழித்தெழுந்தோம் — மூடக்
கட்டைப் பிளந்தெறிந்தோம்
பெண்கள் தலே நிமிர்ந்தோம் — அஞ்சும்
பேதமை ஏதினிமேல்?

கணபாடி : சரி, சரி, அந்தப் பயல் போட்ட தூபம்! உன் னேப் படிக்கவைத்ததே பிசகு – படிப்பே கூடாது. அதிலும் இந்தக் கோணல் எழுத்து கிட்ட வரக்கூடாது. என்ன துணிச்சல், என்ன துணிச்சல் – பயமே இல்லே.

வேதம் : அப்பா, வேதம் பயப்படச்சொல்லியிருக்கிறதா– அடிமைப்படச் சொல்லியிருக்கிறதா-?

" கோழைத்தனம் விடுத்தோம் — வீரக்
கோபுரம் போலுயர்ந்தோம்
ஏழையர் யாரினிமேல் — ஏமாற்றும்
எத்தர்கள் யாரினிமேல்?"

கனபாடி : அப்புறம் — மிச்சத்தையும் பாடு...

வேதம் : " கற்றுக் கலை வளர்ப்போம் — நாங்கள்
காதல் மணம் புரிவோம்."

கனபாடி : ஹூம் — காரியம் மிஞ்சிப்போனது — விபரீதம் விபரீதம் - இந்தக் காதல் கலியின் தர்பார் காதலியே ... அப்புறம்?

வேதம் : " ஒற்றுமை கொண்டுயர்வோம் — இந்த
உலகக் கோவிலிலே ..."

கனபாடி : உலகம் கோவிலாம்; மீனாட்சி இருப்பது கோவில் இல்லையா?

வேதம் : உலகக் கோவிலில் எல்லாரும் வணங்கலாம்; எப்போதும் வணங்கலாம். ஆகாயம், நட்சத்திரம், சூரியன், சந்திரன், காற்று, வெளிச்சம், மழை எல்லாம் வானக் கோவிலிலிருந்து வருவன. நீங்கள் மணியாட்டும் கோவிலில் எல்லாரும் புக முடியாதே. சாதி, மதம், சாத்திரம், கோத்திரம், சாம்பல், நாமம் – இன்னும் எத்தனையோ பேதம் உண்டே! பழமையின் கொடுமை ஒழிய வேண்டும்.

கனபாடி : பழைய சம்பிரதாயங்களை ஒழிக்க நீ யார்? இந்த இழவுக்குத்தான் மூலையும் முக்காடுமாகப் பெண்ணுக்குக் கட்டுப்பாடு விதித்தது பழைய சட்டம் –

வேதம் : வஞ்சப் பழங்கொடுமை — எங்கள்
வாழ்வை யழிக்காமல்
மஞ்சளும் குங்குமமும் — புது
மலருமா யிருப்போம்.
மானிட வாழ்வினுக்கே — பெண்மை
மங்கல சக்தியன்றே?
ஏனினி வேற்றுமைகள் — கதிர்
இன்றி இரவியுண்டோ?

கனபாடி : உன் மனம் போனபடி நடப்பாயா? வீட்டில் அடங்கிக் கிடப்பாயா? உன்னை விலங்குபோட்டு வைக்கிறேன். போடி உள்ளே - வயது பதினெட்டு - இழவெடுத்த சாரதா சட்டமில்லா விட்டால் ஆறு வயசிலேயே அத்தான் வந்திருப்பான். இதற்குள் இரண்டு பிள்ளை பெற்றிருப்பாய்.

வேதம் : வீர வுறுதி கொண்டோம் — பழம்
விலங்கை முறித்தெறிந்தோம்
பாரினையாளுகின்றோம் — ஓம்
பராசக்தி பெண்மை என்றோம்.
(சிலங்கை குலுங்கச் செல்லல்)

கனபாடி : இனி வீட்டுக்கு வராதே — அப்படியே போ ...

வேதம் : காந்தித் திருநாள் — நீயும் வா...

கனபாடி : என்ன காந்தி! என்ன காங்கிரஸ்! என்ன தேசம்! என்ன பாசம் — படுமோசம் — காந்தித் திருநாளாம் — என்ன நடக்கிறது — பார்த்து வந்து தலை முழுகுவேன்.

வேதசாரம் போச்சே
வேதியர் மகிமை போச்சே.
சாதியும் போச்சே சமயமும் போச்சே
சமரசமே எங்கும் பேச்சே! (போதல்)

## காட்சி 6. ஜயராமன்—வேதவல்லி.

[ஜயராமன் ஹரிஜன சங்கத்தின் கணக்கு வழக்குகளைப் பார்க்கிறான். வேதவல்லி ஒவ்வொன்ருக எடுத்துத் தருகிருள். இடையிடையே கொள்கைப் பேச்சு.]

ஜயராமன்: வேதம், கணக்கு ஒழுங்காயிருக்க வேண்டும். பள்ளிக்கூடக் கணக்கைத் தா.......

வேதம்: இதோ...... நூறு குழந்தைகள் படிக்கிருர்கள். ஐந்து ஆசிரியர்கள் பயிற்றுகிருர்கள். ஆடல் பாடல் நாடகத்திற்கு நான். உடற் பயிற்சிக்கு ஒருவர்......

ஜயராமன்: குழந்தைகள் சாப்பாட்டுச் செலவு

| | |
|---|---|
| இருபது வீதம் தலைக்கு | 2000 |
| ஏழு ஆசிரியர் செலவு | 700 |
| எல்லாருக்கும் உடுக்க | 300 |
| பள்ளிக்கூடம் பராமரிப்பு | 1000 |
| ஆக மொத்தம் ரூ. | 4000 |
| அரசாங்கம் தருவது | 2000 |

மீதி 2000. நாம் சரிக்கட்டவேண்டும். தருமப் பிரபு சுப்புராமனும், ஏ. வைத்தியநாதருமே பணம் தருகிருர்கள்.

வேதம்: தொழில் வகைக் கணக்கு இதோ உள்ளது.

ஜயராமன்: நூற்பு, நெசவு, சோப்பு, தையல், காகிதம், பைண்டிங், அச்சகம், கவர்கள், நோட்புக், பற்பொடி, தைலம், மரவேலை, இரும்புப் பட்டரை, பால்பண்ணை - இத்தனைக்கும் செலவு போக நிகரலாபம் ரூ, 10000, இதைக் கொண்டு சாயத் தொழில் தொடங்கலாம்.

அடுத்தது கலைச் செலவு......

வேதம் : ஹரிஜன் நாடகம். கவியோகி சுத்தானந்த பாரதியார் எழுதியது—நல்ல பலனைத் தந்தது. கிராமம் கிராமமாகத் தொண்டர் அதை நடிக்கின்றனர். வீடுவீடாகப் படிக்கின்றனர். நாடகம் நடிக்கும் போதே பிரதிகள் விற்றுப் போயின. மறுபதிப்புப் போடவேண்டும். ஆசிரியருக்கு மரியாதை செய்ய வேண்டும்.

ஜயராமன் : நூல் விற்பனை—ரூ. 1500–அப்படியே அதை மறுபதிப்புக்குத் தரலாம். கவியோகியின் நாடகங்களை நாம் வெளியிடுவோம். அவர் காந்தி நாடகம் எழுதியிருக்கிறார்.

வேதம் : கலைவிழா நடத்தியதில் 5000 வரவு! அதை ஹரிஜன் ஹாஸ்டலுக்குத் தந்துள்ளோம்......

ஜயராமன் : சரி, கணக்கு கச்சிதம். நாளை காந்தி ஜயந்திக்கு என்ன செய்வது ?

வேதம் : காந்தித்தாத்தா பாட்டும் நடனக் காட்சியும் தயாரித்திருக்கிறேன். பிறகு ஹரிஜன் நாடகம் உள்ளது. குழந்தைகளுக்குக் கடலைஉருண்டையும், கொத்துமல்லி கஷாயமும் தருவோம். கலைநிகழ்ச்சிக்கு சுப்புராமன் தலைமை வகிக்கிறார். பொதுக்கூட்டத்திற்கு வைத்தியநாதர் தலைவர். காமராஜ், கக்கன், இருவரும் பேச்சாளர். காலையில் நூற்றல்-நெய்தல் போட்டி பரிசுவழங்குதல். பல நண்பர் குழந்தைகளுக்குப் பரிசுகள் அனுப்பினர்.

ஜயராமன் : அழைப்பு அனுப்பியானதா எல்லோருக்கும் ? பெருங்கூட்டம் இருக்கும்.

வேதம் : மதுரைப் பிரமுகர் எல்லாரும் வருகிறார்கள். அதிசயம்; என் தகப்பனார் கூட வருகிறார்.

ஜயராமன் : கனபாடிகளா ! அப்போது பட்டரும் வருவார். அவர்கள் ஒற்றராகத்தான் வருவார்கள். ' ஹரிஜன் ' என்றுலே அச்சம்! உன்னைக்கூடக் கடுமையாகக் கண்டித்தாராமே.

வேதம் : ஆம் ; இன்று காலைகூடக் கண்டித்தார் ; கடைப்படி தாண்டினுல் காலை நறுக்குவராம். பெண்கள் கட்டைவிரலைப் பார்த்தே நடக்க வேண்டுமாம்; மேடையேறிப் பேசக்கூடாதாம். கலியுகம் வருமாம்.

ஜயராமன் : கலியுகம் வந்து 5050 ஆண்டானதே;இன்னுமா உறக்கம்? இவர்கள் வருவதைவிட வராமல் இருப்பதே நல்லது. காலத்திற்கேற்ற கடமை யறியாது கண்டபடி நடக்கிருர்கள். இங்கு வந்து " தீண்டாதே " பல்லவிபாடினுல்......

வேதம் : இனி இந்த நாட்டில் தீண்டாதே என்ருல் வாயைத் திறக்காதே என்போம். இனிப் பொது ஜனங்கள் சும்மா இருப்பார்களா...... வேதத்தில் தீண்டாமை உண்டா ?

ஜயராமன் : பிராமணர் வேதம் படிக்கிருர்களா? இதாரும் ஹரிஜனங்களை ஆதரிப்பதில்லை. அடுத்த வாரம் மீனுட்சி கோவிலுக்குள் புகுவோம். எத்தனைபேர் நமக்குச் சாதகமாயிருப்பார் என்பது தெரியும்.

வேதம் : கடவுளும் கடமையும் நமக்குச் சாதகமே.. தைரியமாக முன்செல்வோம். நமது சொந்தக் காரியம் கூட அப்படியே...

ஜயராமன் : உன் அப்பா 144 போடுகிருரே—

வேதம் : 124 போட்டாலும் காரியம் நிற்காது. இது லட்சியத் திருமணம்.

ஜயராமன் : வேதம், உன் அன்பும் ஆர்வமும், எனக்குத் தெரியும். நீ என் சக்தி.

வேதம் : நீர் என் சிவம்.

ஜயராமன் : நீ என் விளக்கு.

வேதம் : நீர் என் சுடரொளி.

ஜயராமன் : நீ மலர்,

வேதம் : நீர் மணம்.

ஜயராமன் : நீ என் உள்ளம்.

வேதம் : நீரே உள்ளத் துடிப்பு.

ஜயராமன் : வேதம், எத்தனையோ பிறவிகளில் உன்னுடன் உயிரும் உடலும்போல் இருந்திருக்கிறேன். இந்தக் காதல் ஆத்மக்காதல்.

வேதம் ; உள்ளத்தை கதுவும் சக்தி மின்சாரமே காதல். நான் உதாத்தம் ; நீர் அனுதாத்தம். நான் பக்தி ; நீர் ஞானம்.

ஜயராமன் : ஞாபகம்—என்பதே நமது குறிப்பு.
ஞா = ஞானம், ப = பக்தி, க = கர்மம், ம் = ஓம்.
ஓம் ஆகியக் கடவுளை ஞானத்தால் அறிந்து பக்தியால் கலந்து, கர்மத்தால் வழிபடுவோம், ஞானம் தேன் ; பக்தி மணம்; கர்மம் அழகு. எங்கே, பாடு நமது லட்சியப் பாட்டை ; உன் இனிய குரலைக் கேட்போம்.

வேதம் : (பாடியாடல்)

அன்புடனே மனங்கலந்தே
ஆனந்தமாய் வாழ்வோம்
பண்புடனே ஆன்மநேயப்
பயனுடனே வாழ்வோம்.

ஞால வுயிரத்தனையும்
நம்முயிரென் றறிவோம்
காலவுயிர்ப் பவனியிலே
கைகோத்துச் செல்வோம்,

ஜயராமன் : (கைகோத்து)

மனதுடனே மனம்பொருந்தி
மணவாழ்வு கொள்வோம்
தினகரன் போற் சேவையிலே
தினந்தினமும் வாழ்வோம்.

வேதம் : வேலைசெய்து விளைத்துண்ணும்
வேதநெறி கற்போம்
சோலை வைத்துக் கனியுண்டு
சுறுசுறுப்பா யிருப்போம்.

ட்ரங் ட்ரங்...ட்ரங் ட்ரங் !
[ஃபோன் அழைக்கிறது[

ஜயராமன் : ஹல்லோ சுப்புராமா...சரி, சரி வந்தனம். ஆம் அடுத்தவாரமே கோவில் பிரவேசம் ; தயார்...

[வருதல் நல்லாயி, வீரமுத்து]

நல்லாயி : வணக்கம் ஐயா—வணக்கம் அம்மா.

ஜயராமன் : என்ன நல்லாயி, தோட்டவேலை எப்படி? வீரமுத்து நன்ருகப் படிக்கிருன். அவனை டாக்டர் படிப்பிற்கு அனுப்பப் போகிருேம்.

நல்லாயி : உங்க புண்ணியத்திலே தோட்டப் பயிரும் செழிப்புத்தான். எங்க வீட்டுப் பயிரும் (வீரமுத்துவைத் தொட்டு) செழிப்புத்தான். வீரமுத்து சந்தோசமாயிருக்கிருன்.

வீரமுத்து : அம்மா, கடவுளே என்னை இங்கே சேர்த்தார். ஐயாக்கள் அன்புமயம். இந்தத் தாயின் உள்ள

மெல்லாம்கருணை. நான் நினைத்தது பலித்தது. P. U. C. தேறியதும் மருத்துவம் பயில்வேன். பிறகு நம்மை ஒதுக்கிவைத்தவர் வீட்டுக் கெல்லாம் சென்று வைத்தியம் பார்ப்பேன்... நம்மைத் தொடாதவர் கைகளைத் தொடுவேன். மதிக்கப்படுவேன். அன்பைக்காட்டி அன்பை அடைவேன்.

ஜயராமன் : எப்படிப் பேசுகிறான் பார் நல்லாயி!

வேதம் : இவன் ஒரு புக்கர் வாஷிங்டன்.

வீரமுத்து : ஆம் அம்மா; நான் இதே ஹரிஜன நிலையத்தை மற்றொரு டஸ்கிகியோக்குவேன்.

ஜயராமன் : ஆனால் ஒன்று; ஹரிஜன இயக்கம் பிறஜனங்களை வெறுக்கவன்று. மற்றவர்களுடன் கலந்தே வாழவேண்டும். நாளடைவில் நாம் ஒரே இந்திய சமுதாயமாக வேண்டும்; அதன் பின் ஒரே மனித சமுதாயமாகவேண்டும். தனிச்செருக்கும், பிரிவினைத் தீதும் எங்கும் இருக்கக்கூடாது.

பயமிலாத நேர்மையும்
  பகையிலாத நெஞ்சமும்
சுயநலமிலாத தொண்டும்
  தூய வாழ்வும் வேண்டினோம்.
இயல் வழியில் ஓங்குகின்ற
  இல்லறத்தை. வேண்டினோம்
தயவு மிக்க சுத்த சக்தி
  தந்தனள் மகிழ்ந்தனம்!

ட்ரங் ட்ரங் ட்ரங்...
    [ஃபோன்] ஹல்லோ

வைத்திநாதையரா...இதோ வருகிறேன்... வேதம், ஐயர் அழைக்கிறார். உன்னையும் வரச்

சொன்னார். செல்வோம். நல்லாயி, தோட்டத்தைக் கவனி; வீரமுத்து, நல்லாப்படி. நீ தமிழ் மணியாக விளங்கவேண்டும் [செல்லல்]

## காட்சி: 7. வைத்திநாதர்—ஜயராமன்

[வைத்திநாதர் வீட்டில் ஹரிஜனசங்க நிர்வாகிகள் கூட்டம். ஜயராமன் கணக்குகளைக் காட்டுகிறார்.]

வைத்தி: எல்லாம் கச்சிதம். சங்கம் வளர்ந்து வருகிறது. வீரமுத்துவை அடுத்த ஆண்டே மருத்துவக் கல்லூரியில் சேர்த்து விடுவோம். திரு. கக்கன் அவர்கள் பெரிய நிலைக்கு வந்தது நமக்கெல்லாம் மிகப்பெருமை. சண்முகம், சாம்பன், முருகன், வள்ளி, வீராயி அனைவரும் படிப்பிலும் ஒழுக்கத்திலும், கைத்தொழிலிலும் முன்னேற்றமடைந்திருக்கிறார்கள். இவர்கள் அனைவரையும் தைலம் தேய்த்துக் குளித்துத் திருநீறு பூசி "வீடலால வாயிலாய்" பாடிக்கொண்டே உள்ளே புகச் செய்ய வேண்டும்...பட்டர் என்ன சொல்லுகிறார்?

ஜயராமன்: பட்டரும் கனபாடிகளும் இன்னும் சிலரும் கடுமையாகவேயிருக்கின்றனர். கனபாடிகள் ஆவேசக் கனல் பறக்கக் கண்ணகியாவாராம். பட்டர் பதறுகிறார் நான் எவ்வளவோ சொல்லிப் பார்த்தேன்.

வைத்தி: உன் அப்பா தானே!

ஜயராமன்: வீட்டில் அப்பா...வெளியே எதிர். இருந்தாலும் நல்லவர்.

வைத்தி: நாம் காந்தி பக்தர். யாரும் நோகாமல், பலாத்காரமில்லாமல் நமது காரியத்தைச் சாதிக்க

வேண்டும். மீண்டும் அப்பாவையும் கனபாடிகளையும் இங்கே வரச் சொல்லு. தெய்வ சந்நிதியில் தேவாரம் பாடிச் செல்வது, ஆயிரம் குரல்கள் ஹரஹரமஹாதேவா என்று கூவுவது குற்றமாயிருக்க முடியாது. நாம் நமது சமய ஒழுக்கந் தவறாது நடப்போம்.

ஜயராமன் : நமது இந்து தருமத்தை நாம் உறுதியாகக் காக்க வேண்டியது நமது கடமை. நான் காலை குளித்து. சந்தி ஜபம் செய்து மீனாக்ஷி சுந்தரேசர் தரிசனம் செய்து மதாசாரத்தை நிறைவேற்றியே சங்கத்திற்கு வருகிறேன். இப்படியே நமது சங்கத்தைச் சேர்ந்தவர்களும் மதக் கடமை செய்கிறார்கள். நமது சமயத்தவரிடம் அன்பு கொண்டு அவர்கள் பிறமதம் புகாது தடுப்பது நமது குறிக்கோள். ஆதலால் ஏழுகோடி ஹரிஜனர் நம்மவராக வேண்டும். இந்தியர் தொகை கரையக் கூடாது. நம்மவர் தமது இந்து தருமத்தை அறிந்து நடக்க வேண்டும்.

வைத்தி : இந்து தருமத்தில் எல்லாரும் ஆன்மநேயர்; ஏகம்ஸத்; உள்ளதுஒன்றே என்பதே அதன் அடிப்படைத் தத்துவம், இனி இந்தியர் வகுப்பு வாதம் பேசாமல் ஒரே இனமாக மனமொத்து வாழவேண்டும்.

'பிறப்பொக்கும். எல்லாவுயிர்க்கும்
சிறப்பொவ்வா
செய்தொழில் வேற்றுமையால்"

என்ற வள்ளுவர் வாக்கே நமது நோக்கு. பிறந்தவர் யாவரும் ஒரே மானிடமே. தொழிலால் அவரவர் சிறந்தவராவர்.

''திறமை கொண்ட தீமையற்ற
தொழில் புரிந்து யாவரும்
தேர்ந்த கல்வி செல்வ மெய்தி
வாழ்வோமிந்த நாட்டிலே!
விடுதலை! விடுதலை! விடுதலை!

என்ற பாரதி வாக்கை மஹாத்மா நிறைவேற்றினர்...

ட்ரங் ட்ரங் ட்ரங்
[∴ போன்] ஹல்லோ !

சுப்பராமணு, கோயில் ஏற்பாடு முறையாகச் செய்துள்ளோம். பத்திரிகையில் விளம்பரம் செய்வோம்; சரி, நாளை சந்திப்போம், உடம்பை கவனிக்கவும். இனி நாளை காந்தி காட்சி சாலையில் நமது கூட்டம் நடக்கும். காந்திப் பாட்டு மட்டும் போதும். மற்ற விஷயங்கள் எல்லாரும் அறிந்தனவே.

## காட்சி: 8. காந்தி தாத்தா பாட்டு

[தல்லாகுளம்; காந்தி காட்சி சாலை பொதுக் கூட்டம். அலங்காரமேடை. ஹரிஜன சங்க மாணவர் காந்தித் தாத்தா பாட்டுப் பாடுகிறார்கள். அதிலுள்ள காட்சிகள் பின்னணியில் வருகின்றன. காந்தியாக ஒரு முதியவர் நடிக்கிறார். பாட்டைப் பல ராகங்களில் தாளக் கட்டுடன் பாடவேண்டும். பிடில், மிருதங்கம், புல்புல், சுர கெத் முதலிய ஆர்ச்செஸ்ட்ராவுடன் இசைத்தல் நல்லது]

தேசத்திலே பெரிய தாத்தா—நாங்கள்
　　தெய்வமெனக் கொண்டாடும் தாத்தா
நேசத்திலே பெரிய தாத்தா—வாழ்க
　　நிகரில் மகாத்மாகாந்தி தாத்தா !

கூனிக் குறுகியிருந்தாலும்—இளங்
　　குமரன் என்றும் எங்கள் தாத்தா
வானக் கருமுகிலைப்போலே—எங்கள்
　　வாழ்வு தழைக்கவந்த தாத்தா.

என்பு தெரியமெலிந்தாலும்—அவர்
　　இமயத்தினும் பெரிய தாத்தா
அன்பு வடிவான தாத்தா—நாட்டின்
　　அடிமை விலங்கறுத்த தாத்தா.

ஏழைக்கிரங்குகின்ற தாத்தா—எங்கள்
　　ஏக்கத்தை நீக்குகின்ற தாத்தா.
கோழைத்தனம் விடுத்து நாங்கள்—சிம்மக்
　　கூட்டம்போல் எழச்செய்த தாத்தா.

சீமையிலேபடித்த தாத்தா—பெரும்
　　செல்வத்தொழில் புரிந்த தாத்தா
தீமை நலிய நலம் பொங்க—சர்வத்
　　தியாகம் செய்த வீரத்தாத்தா.

தேட்டால் கடுஞ்சிறையைத்தாங்கி—நல்ல
　　நீதிக்குப் போர்புரிந்த தாத்தா.
மாட்டைப்போல் பாடுபட்டு வருந்தும்—ஏழை
　　மக்கள் கண்ணீர் துடைத்த தாத்தா.

பாழும் சிறையில் அடை பட்டும்—கடும்
　　பட்டினி யிருந்துடலம் கெட்டும்—நாங்கள்
வாழும் விடுதலைக்கே நோற்ற—தூய
　　மாதவ ராஜரெங்கள் தாத்தா.

பஞ்சடித்திராட்டினத்தில் நூற்றே—தொழிற்
பாடம் புகட்டுகின்ற தாத்தா.
துஞ்சா முயற்சியுள்ள தாத்தா—ஒரு
சொல்லால் உலகை வெல்லும் தாத்தா.

தண்டிக்குக் கால்நடையாய்ச் சென்றே—உப்பு
சட்டத்தை ரத்துசெய்த தாத்தா.
எண்டிசை யுலகிலும் இவர்போல்—மகான்
இல்லையெனப் பேரெடுத்த தாத்தா.

கோலைப்பிடித்து நடந்தாலும்—தர்மக்
கோட்டையைக் காத்து நிற்கும் தாத்தா
காலைபோற் சாந்தமுள்ள தாத்தா—நாட்டுக்
கவலை துடைத்தருளும் தாத்தா.

புலம்பித் துடிதுடித்த மக்கள்—மனப்
புண்ணைக் குணப்படுத்தும் தாத்தா
விலங்கு வலியை ஆத்ம சக்தி—கொண்டே
வெல்லும் விறல்படைத்த தாத்தா.

அஞ்சாத நெஞ்சுடைய தாத்தா—உண்மை
அகிம்ஸை வீரர் எங்கள் தாத்தா
நஞ்சான குண்டுவெடித்தாலும்—புண்
ணைத்துப் பொறுத்து வெல்லும் தாத்தா.

எளிய வாழ்வுடைய தாத்தா—உடல்
எடுத்த கீதை யெங்கள் தாத்தா
தெளிந்த ராமஜபத்தாலே—தெய்வத்
தீச்சுடர் போல்விளங்கும் தாத்தா.

தரும வீரர் எங்கள் தாத்தா—உப
சாந்த புருஷர் எங்கள் தாத்தா
கரும வீரர் எங்கள் தாத்தா—வாழ்க
காந்தி மகாத்மா நல்ல தாத்தா !...

சுப்புராமன் : (எழுந்து) தோழர்களே, காந்திமகான் வாழ்க்கையை இந்தப் பாட்டு படம் பிடித்துக் காட்டுகிறது. கதர், மதுவிலக்கு, ஹரிஜன முன்னேற்றம், சமுதாய ஒற்றுமை, இந்த நான்கும் மஹாத்மாவின் திட்டங்களில் முதன்மையானவை. நாம் ஒன்ருயிருந்தால் நன்ருயிருப்போம். நமக்குள் ஒரு கூட்டத்தைக் கிட்ட வராதே என்று ஒதுக்கி விட்டு, '' எல்லாரும் நன்ருய் வாழ்க! (சர்வே புவந்து சுகின :) என்று பாடுவதில் பொருளில்லை. மஹாத்மா காட்டிய அன்பு வழியே வழி ; நாம் ஹரிஜனங்களை அன்பினுல் அணைத்து ஆதரிக்கவே சங்கம் நாட்டினேம். மதுரை ஹரிஜன் சேவா சங்கம் மஹாத்மா காந்தியின் ஆசியைப் பெற்றது. இந்தச் சங்கத்தில் வளர்ந்த திருக்குல மணிகள் சிறந்த தேசபக்தர்களாக விளங்குகிருர்கள். அரிய பொது நன்மை செய்கிருர்கள். இங்குள்ளவர் எல்லாரும் உண்டு, உடுத்து, இருந்து. படித்து முன்னேறும் காரியங்களைச் செய்கிருேம். அடுத்தவாரம் எங்கள் மாணவரும் ஏராளமான ஹரிஜனங்களும் மீனுட்சி தரிசனம் செய்வார்கள். அது பற்றி. நமது தலைவர் வைத்திநாதர் பேசுவார். அவர் உடல், பொருள், உயிர் எல்லாம் ஹரிஜன சேவைக்கே அர்ப்பணித்தவர் என்பதை நாம் அறிவோம்.

வைத்தி : அன்பர்களே,

பேச்சு அதிகம் தேவையில்லை; செயலிற் புகுவோம். ஹரிஜனர் நம்மவர் ; நமக்குரிய உரிமை அவர்களுக்கும் உண்டு; நாம் மீனுட்சி தரிசனம் செய்கிருேம். அவர்களுக்கும் தரிசன உரிமை உண்டு. நாம் பக்தி

பரவசத்துடன் பாடுகிறோம், பணிகிறோம். அவர்களுக்கும் அந்த உரிமை உண்டு. எல்லாரும் அடுத்த வெள்ளிக்கிழமை ஐந்து மணிக்கு மீனாட்சி சுந்தரேசர் சந்நிதிக்கு வாருங்கள்.

''எல்லாரும் வாருங்கள்
எல்லாரும் சேருங்கள்
ஈசனை அன்பு செய்வோம்;
எல்லாரும் பாடுங்கள்
எல்லாரும் கூடுங்கள்
இறைவன் ஒருவன் என்போம்''

காமராஜ்: தை வெள்ளிக்கிழமை கோவிலில் சந்திப்போம்

எல்லாரும்: இன்பமே சூழ்க! எல்லாரும் வாழ்க!
அன்பே நிறைக! அருளே பெருக!

பட்டர்: எப்படி, கனபாடிகளே? என்ன செய்வோம்?

கனபாடிகள்: வீட்டில் பேசிக் கொள்வோம்! முடிந்தமட்டும் பார்ப்போம்—மீனாக்ஷி துணை

## காட்சி: 10 மீனாட்சி சந்நிதி

[கனபாடிகளும், பட்டரும் மீனாட்சியைத் துதித்தல். வெளியே ''வீடலாலவாயிலாய்'' என்ற தேவார முழக்கம் கேட்கிறது.]

தாயே, மீனாட்சி இன்று புதிய அலை மோதுகிறது. ஹரிஜனர் உள்ளே வந்து உன்னைத் தரிசிப்பார்களாம். உன் இச்சை என்ன?...

பட்டர்: ''ஸ்ரீமத் சுந்தர நாயகீம் பயஹராம்
ஞானப்ரபாம் நிர்மலாம்
ஶ்யாமாம்பாம் கமலாஸனார்சித பதாம்
நாராயணஸ்யானுஜாம்
வீணாவேணு ம்ருதங்க வாத்யரசிகாம்
நாநாவிதாடம்பிகாம்''

[வருதல் வைத்திநாதர், சுப்புராமன், ஜயராமன், வேதவல்லி]

நால்வரும் : மீனாக்ஷீம் ப்ரணதோஸ்மி ஸந்ததமஹம்
காருண்ய வாராம் நிதிம்...

[மீனாக்ஷி அசரீரிவாக்கு : ''என் குழந்தைகள்
எல்லாரும் உள்ளே வரட்டும்'']

பட்டர் : தேவி, உத்தரவாய் விட்டது.

கனபாடி : வேதவல்லி, இனிமையாகப் பாடி எல்லாரையும் அழைத்துவா...

[வேதவல்லி ஒரு வரி பாட எல்லாரும் பின்னே பாடி வருதல்]

வேதம் : ''ஸ்ரீவித்யாம் சிவவாமபாக நிலயாம்
ஹ்ரீங்கார மந்த்ரோஜ்வலாம்
ஸ்ரீசக்ராஞ்சித பிந்து மத்ய வஸதீம்
ஸ்ரீமத் ஸபா நாயகீம்
ஸ்ரீமத் ஷண்முக விக்னராஜ ஜனனீம்
ஸ்ரீமத் ஜகன் மோஹினீம்

எல்லாரும் : மீனாக்ஷிம் பரண தோஸ்மி
ஸந்ததமஹம்
காருண்ய வாராம் நிதிம்!

[வணங்குதல். மணியடிக்கிறது—மேளம் தீபாராதனை]
(மோகனம்—ஆதிதாளம்)

வேதம் : வேதாகம ஞான விளக்கொளிநீ!
பாதாரமலர் பணிசேயெனையாள்
ஆதாரமுநீ ஆதேயமுநீ!
மாதா ஜய ஓம் மதுராம்பிகையே!

[ஆனந்தக் கூத்து]

எல்லாரும் : மாதா ஜய ஓம் மதுராம்பிகையே!

வேதம் : முகமும் மதுரம் முறுவல் மதுரம்

அகமும் புறமும் அழகும் மதுரம்
இகமும் பரமும் எவையும் மதுரம்!
சுகமும் மதுராம்பிகை தோத்திரமே!

எல்லாரும் : அழகுத்திருவே அமுதச் சுவையே!
பழகப் பழகப் பழநற் கவியே
எழிலார் திருவே எனதாருயிரே!
பொழிலார் மதுரைப் பொலிவே சரணம்!
ஜயமதுராம்பா ஜயமதுராம்பா
ஜயமதுராம்பா ஜயமதுராம்பா!

[எல்லாரும் சுந்தரேசர் சந்நிதியில் பாடுதல். கோவில் காட்சிகளூடு ஹரிஜனங்கள் தலைவருடன் செல்லல்,]

எல்லாரும் : [தீபாராதனை நடக்கும் போது]
ஹர ஹர ஹர ஹர ஹ்ருதயேசா—சிவ
மீனாக்ஷி ரமணா சுந்தரேசா.

வேதம் : காதலாகி கசிந்து கண்ணீர் மல்கி

வீரமுத்து : ஓதுவார் தம்மை நன்னெறிக்குய்ப்பதும்

மாணவர் : வேதம் நான்கினும் மெய்ப்பொரு ளாவதும்
நாதன் நாமம் நமச்சிவாயவே!

தல்லாயி : வழிவிட்ட கடவுளே! பழிதீர்த்த பரம்பொருளே—வணக்கம் வணக்கம்!

வீரமுத்து : மீனாட்சி சுந்தரேசப் பெருமானே, என் மனம் குளிர்ந்தது! ஒரு சபதம் நிறைவேறியது. மற்றொரு சபதமும் நிறைவேறி, இந்து சமூகம் இணைந்து வாழ வேண்டும்.

''ஞாலம் நின்புகழே மிக வேண்டும் தென்
ஆலவாயில் அமர்ந்திடும் ஆதியே''

வைத்திநாதர் : பொங்கல் விநியோகம்—தாராளமாக வாங்கிச் செல்லுங்கள். வேதவல்லி கோஷ்டியின் கும்மி நடக்கிறது. மண்டபத்தில் எல்லாரும் வாருங்கள்.

## காட்சி : 11. சங்கநாதம்

[ஒரு குத்து விளக்கு—சுற்றிலும் வேதவல்லி நல்லாயி! முதலிய பெண்கள் கும்மிதட்டுகின்றனர். சங்கும் ஊதுகிறது.]

ஓம் ஜயம் ஜயம் என்றே ஊது சங்கே
ஒன்றே கடவுள் என்றே ஊது சங்கே!
நாம் அதன் சக்தியென்றே ஊது சங்கே!
ஞாலமதன் கோவிலென்றே ஊது சங்கே!

ஈனமனமயக்க வேற்றுமை யெல்லாம்
இன்றே டொழிந்ததென்றே ஊது சங்கே!
வானக்குடை நிழலில் மானிடரெல்லாம்
வாழ்வாங்கு வாழ்வோமென் றூதுசங்கே!

வெள்ளி வெளுத்ததென்றே ஊது சங்கே!
விடுதலை வந்ததென்றே ஊது சங்கே!
உள்ளங் கனிந்ததென்றே ஊது சங்கே!
உலகெல்லாம் வாழ்க வென் றூதுசங்கே,

அமைதி அமைதி யென்றே ஊதுசங்கே
ஆற்றல் வளர்ந்ததென்றே ஊதுசங்கே!
சமயோக சாதனத்தை ஊதுசங்கே
சத்யயுகம் வந்ததென்றே ஓதுசங்கே!

கொடுமை ஒழிய உயிர்க் கொலையொழிய
கொள்ளை ஒழியப் பகைவர் சள்ளை ஒழிய
மடமை வறுமையிருள் மறைந்தொழிய
மறுமலர்ச்சி வந்ததென்றே ஊதுசங்கே!

சித்தந் தெளிந்ததென்றே ஊதுசங்கே
    தீண்டாமை செத்த தென்றே ஊதுசங்கே
சக்திபிறந்ததென்றே ஊதுசங்கே !
    சண்டை ஒழிந்ததென்றே ஊதுசங்கே !

மங்கல முரசு கொட்டி ஊதுசங்கே !
    மாநிலம் பொதுவென்றே ஊதுசங்கே !
எங்குமுள்ள சுத்தசக்தி இன்னருளினுல்
    எல்லாரும் வாழ்கவென்றே ஊதுசங்கே !

[சிறுகுழந்தைகள் இரண்டு வரிசையாக நின்று மாறி, மாறி பாட்டிற்கேற்ப நடனம் ஆடுதல்]

"திருவருளே திருவருளே வா, வா !
    தெய்வ சக்தித் திருவருளே வா, வா !
குருவருளே குருவருளே வா வா—மாந்தர்
    குலமெல்லாம் நலம் பெறவே வா வா ! (திரு)
புதுவாழ்வும் புதுயுகமும் பொலியவே
    பொங்கு மங்கலங்கள் எங்குமிலகவே
முதுமையான நல்லறங்கள் வாழ்கவே
    முத்தமிழ் நாடு செழித் தோங்கவே (திரு)

மறுமலர்ச்சிக் கலை பூத்துக் குலுங்கவே
    மானிடத்தில் அமரத்தன்மை துலங்கவே
வறுமை யடிமை மடமைப்பேய் விலகவே
    வண்மையுடன் வளம் பொழிய வா வா (திரு)

ஒற்றுமை முரசுகொட்டி வா வா
    ஒருமையுடன் உயிர்கள் வாழ வா வா !
சுற்றுலகு வெற்றிகூற வா வா
    சுதந்தரப் பல்லாண்டிசைத்து வா வா (திரு)

காசினியின் கண்ணொளியே வா வா
    காலசக்தி முத்தமிட வா வா !
ஆசி கூறி நேசமுற வாவா
    அன்பு கூறியழைக்கின்றோம் வாவா ! (திரு)

கண்குளிர மனங்குளிர வாவா—நாங்கள்
கைவீசித் தலைநிமிர வாவா!
பண்முழங்கிப் பரவசமாய் வாவா
பரம சுத்த சக்தியமே வாவா! (திரு)

காமராசர்: நண்பர்களே! தீண்டாமை ஒழிந்தது! இந்தியாவில் உள்ளவர் இந்தியர்; இந்தியர் அனைவரும் ஒரு சமுதாயமாகச் சேர்ந்து வாழு வோம்; ஒற்றுமையே வெற்றி: உள்ளன்பே சக்தி! ஜெய்ஹிந்த்!

## காட்சி: 12. கனபாடிகள் ஆவேசம்

பட்டர்: நடந்து போனது காரியம்! எத்தனையோ தலைமுறையாக நடந்துவந்த கட்டுப்பாடு விட்டுப் போனது. ஹூம்! இனி என்ன செய்ய முடியும்? காலத்திற் கேற்ற கோலமும் வேண்டியதுதான்.

[கனபாடிகள் ஆவேசமாக]

கனபாடி: ஹூம்......காலமாவது கோல்மாவது......என் சந்நிதானம் தீண்டலானதே—ஹா ஹூ ஹும் ஹூம் படேஸ்வாஹா! தீண்டாதாரை என் சந்நிதானத்தில் கொண்டு வருவது; நீயும் மணியாட்டி தீபாராதனை செய்வதா! டம்டும் படேஸ்வாஹா! இனி ஊர் நாசம்! காலரா வரும், பேதிவரும், பீதிவரும்! அழிவு வரும்! ஹா ஹூ நான் போய் விட்டேன். இனிக் கோவிலுக்குள் வரமாட்டேன், வரம்தரமாட்டேன்; பூஜையைப் பெற மாட்டேன். என் யந்திரம் தீண்டலானது. மந்திரம் தீண்டலானது. ஹூம் ஹம் ஹூம் படேஸ்வாஹா (தடால் என்று விழுகிறார்)

பட்டர் : சுவாமி சுந்தரேசா! அம்பா மீனுட்சி அபரா தம் அபராதம்!...[உடல் நடுங்க]

கனபாடி : டே நான் ஆவணி மூல வீதியில் இருக்கிறேன் இனிக்கோவிலுக்குப் போக மாட்டேன். நீயும் போகாதே-நான் மீனுக்ஷி பேசுகிறேன் ஹா ஹா

பட்டர் : அம்மா, தாயே மீனுட்சி மன்னிக்கணும்; மன்னிக்கணும், தெரியாமல் செய்துவிட்டேன்' ஹ...ஹ...லலலல லொளலொள...மிமிமிணு ணுக்ஷிக்ஷி.. இஇஇ.

[வருதல் ஜயராமன், வேதம்]

ஜயராமன் : ஏனப்பா நடுக்கம்...

வேதம் : ஏனப்பா ஆவேசம்...

கனபாடி நீ நாசமாய்ப் போக...மீனுட்சி போய் விட்: டாள்.

வேதம் : ஹஹஹஹ! அப்பா இதென்ன சித்தப் பிரமை? மீனுட்சி இப்போதுதான் சந்தோஷ மாயிருக்கிருள், அதோ பார்.

[சந்நிதிக் காட்சி காட்டல்]

[ஆயிரக்கணக்கான பக்தர்கள் மாதா ஜய ஓம் மதுராம் பிகையே என்று முறையிட்டுத் தொழுகிருர்கள்]

பட்டர் : மெய்தானம்மா, மெய்தான்...கனபாடிகளே, மீனுட்சி கர்ப்பக்கிரகத்திலேதான் இருக்கிருள்.

கனபாடி : சுந்தரேசர்?...

பட்டர் : மீனுட்சியிருந்தால் சுந்தரேசரும் இருக்கத் தானே வேண்டும்.

கனபாடி : இரண்டு பேரும் இருக்கிருர்களா?

ஜய்ராமன் : பாருமே அதோ தேவாரம் முழங்குகிறது. திருவாசகம் ஒலிக்கிறது. கேளுமே "ஓசை "ஒலியெலாம் ஆனுய் நீயே"

பட்டர் ; ஆம் கனபாடிகளே.

கனபாடி : எனக்கு நிம்மதியில்லே. இன்னம் ஒருவாரம் பார்ப்பேன். என்னம்மை மீனுட்சியும் என்னப்பன் சுந்தரேசனும்,கோவிலேவிட்டுப் போனுல், போனுல் போனுல்...இப்படியே பொற்ருமரையில் விழுந்து சாவேன். அல்லது என் மண்டையில் நீ கல்லேத் தூக்கிப்போடு, உன் மண்டையில் நான் கல்லேத் தூக்கிப் போடுகிறேன். இருவரும் திருப்பரங்குன்றத்தில் சாவோம்...

ஜயராமன் : சாவானேன் மாமா?

கனபாடி : ஏனு! ஏனு! ப்ருஷ்டா...என் மகளேயும் கெடுத்தாய். உன்னேச் சபிக்கிறேன் பார் (விபூதி எடுத்து ஊதி) ஹூம் படேஸ்வாஹா! மம சத்ரூன் தாடய! தாடய, மாரய மாரய, நாசய நாசய!

வேதம் : ஜய ஜய ஜய ஜய அப்பா உனக்குச் சித்தப் பிரமை. இப்போதுதான் கோவில் களே நிரம்பியது. இப்போதுதான் இந்துமதமே நிறைவானது. இனி நம்மவர் பிறமதம் புகாமல் நம்முடன் நிம்மதியாக வாழ்வார்.

கனபாடி ; வாழ்வார் டீ வேதவல்லீ...என்ன செய்தாயடீ? எனக்கு மகளாய்ப் பிறந்து, இந்தப் பயலுடன் கூடி என்ன செய்தாய டீ?

வேதவல்லி : நான் என்னப்பா செய்தேன்...உலகுக்கு நல்லது செய்தேன். இந்து சமுதாயத்திற்கு நல்லது செய்தேன்.

கனபாடி : என் மகளாகப் பிறந்து நீ கூட்டத்தில் அப்படிப் பாடலாமா! ஆடலாமா? அவனுக்குத் தாளம் போடலாமா

வேதவல்லி : அப்பா நீ இப்படி வாடலாமா? என்மேல் சாடலாமா? தெய்வ சம்மதமும், பொதுஜன சக்தியும் நிறை வேற்றிய காரியத்திற்காக எங்கள்மேல் பழி போடலாமா?

கனபாடி : ஹும்படேஸ்வாஹா! மூதேவி! நீ பெண்ணு! அவனேடே என்ன பேச்சு?

வேதவல்லி : யாரோடே அப்பா?

கனபாடி : இந்த ஜயராமனேடே;அவன் உன் கணவனு?

வேதவல்லி : ஆம் (தலை குனிந்து புன்னகைத்தல்)

கனபாடி : ஆ...மா...மா...உன் மண்டையை உடைக்கிறேன். காலை வெட்டுகிறேன். அவமானப் பீடையே, அடக்கமில்லாத அவலமே, வீட்டைவிட்டுப் போ சொல்லுகிறேன். என் குலதர்மம் போனதே, கோயில் போனதே! வேதம் போனதே-போனதே-போனதே.

[அடித்து அழுகிருர்]

ஜயராமன் : அப்பா இவருக்குச் சித்தப் பிரமை; உள்ளே தள்ளிச் சென்று படுக்கவைப்போம். சரியான டாக்டர் வந்து பார்க்கட்டும் நீ நிம்மதியாயிரு.

பட்டர் : கனபாடிகளே, இந்த ஆவேசமெல்லாம் நேற்று எங்கே போனது? நேற்றே எல்லார் முன்னும் ஆவேசம் காட்டியிருந்தால்.

ஜயராமன் : உதை விழுந்திருக்கும்; காலம் முன்னேறி விட்டது. சமூகம் கண்விழித்தது. இனித் தீண்டாமை, பெண்ணடிமை, சாதிமதபேதம்

எல்லாம் காலவெள்ளத்திற் கரைந்து போகும். ஐயா சிந்தித்துப் பார்க்கட்டும்.

கனபாடி: மாட்டேன், நான் மாட்டேன்; உன் குடலைக் கிழித்து மாலை போடுவேன். ஹே துஷ்டா! ஹே துஷ்டை! மீனாட்சி என்மேல் வந்திருக்கிறாள். உங்களைப் பழிவாங்குவேன், பலி வாங்குவேன்...

பட்டர்: அடடட...லலல...ஐயையோ பயமாயிருக்கே...

ஜயராமன்: நீ ஏனப்பா நடுங்குகிறாய்? இவர் மூளை தலை கீழானது. அதை நேர் செய்ய டாக்டர் வருவார் பார். கனபாடிகளே, போம் உள்ளே. காலப்போக்கை நீர் கண்டிக்க முடியாது. நடப்பது நடந்தே தீரும்.

கனபாடி: நடப்பதா! நாமன்றி ஓரணுவும் அசையாது. [மார்தட்டி] நானே உலகம், நானே மீனாக்ஷி, நானே சுந்தரேசன், உங்களைச் சபிக்கிறேன், உங்களுக்குப் பைத்தியம் பிடிக்கும்; ஹூம் படேஸ் வாஹா...

ஜயராமன்: நாங்களும் உம் பட்டேஸ்வாஹா! அம்பட்டேஸ்வாஹா போடுவோம்...போம் உள்ளே!

[தள்ளிச் செல்லுகிறான்]

பட்டர்: இன்னும் ஒருவாரம் பார்ப்போம். மீனாட்சி இருக்கிறாளா என்று...பிறகுதான் எனக்கு நிம்மதியாகும்; குடல் நடுங்குகிறது.

[செல்லல்]

## காட்சி: 13. நல்லாயி

[ஹரிஜன சங்கத் தோட்டம்; நல்லாயி தக்காளிப் பழக் குவியல் முன்னே]

நல்லாயி : மனசு குளிர்ந்தது! மீனுட்சி தரிசனம் தினம் கிடைக்கிறது. கோவில் புதிய அழகுடன் விளங்குகிறது. மீனுட்சீ, இதெல்லாம் உனக்கே படைக்கிறேன். சாதிபோனது! சோதி ஆனது. வைத்திய நாதர் வாழ்க! சுப்புராமன் வாழ்க! ஜயராமன் வாழ்க! வேதவல்லியம்மா வாழ்க! காந்தி வாழ்க! நேரு வாழ்க! காமராசர் வாழ்க! ஹரிஜன சங்கம் வாழ்க! எங்கள் இனம் முன்னேறியது. எங்கள் கக்கன் மந்திரி யானுர். எங்கள் ஜகஜீவனராமர் மந்திரி யானுர், எங்கள் சஞ்ஜீவையா மந்திரியானுர் காந்தி புண்ணியத்தால் திருக்குலம் முன்னேறியது. எங்கள் காமராஜ் வாழ்க! என் மகன் வீரமுத்து டாக்டராகி இங்கே வேலே பார்க்கிருன். எத்தனே பேருக்குஅவனுல் உதவி! நோயாளிகள் அவனே வாழ்த்துகிருர்கள்.

[வருதல் ஜயராமன்]

ஜயராமன் : நல்லா இரு நல்லாயி; டாக்டர் வீரமுத்து வந்தாரா?

நல்லாயி : அவனுக்காகத்தான் காத்திருக்கிறேன். உண்ணக்கூட நேரமில்லே; நாளெல்லாம் நோயாளிகளேப் பார்க்கிருன், இரவு ஒரு மணிக்குக்கூட ஃபோன் வருகிறது. உடனே மோடாரில் ஓடுகிருன். யாருக்கோ மூளேக் கோளாரும், பார்க்கப் போயிருக்கிருன். சிவா, முருகா என்று சொல்லி மருந்து தருகிருன்.

ஜயராம் : அம்மா, உன் மகன் தெய்வப் பிறவி. என்ன அன்பு, தெய்வ பக்தி, தியாகம், ஆதரவு! மதுரை முழுதும் அவனே வாழ்த்துகிறது. இதோ டாக்டர்!

[வருதல் டாக்டர் வீரமுத்து]

வீரமுத்து : வணக்கம் ஐயா, மாமா உடம்பு எப்படி? வேதம் சௌக்கியமா? இப்போதுதான் சுப்பராமன் வீட்டுக்குச் சென்று வருகிறேன். அவர் தங்கள் பணிநலத்தைப் பாராட்டினர்.

ஜயராமன் : மதுரைக்கு ஒரு மகாத்மா வந்தார். டாக்டர், என் தகப்பனுருக்கு இரத்தக் கொதிப்பு, மாமனுருக்கு மூளைக்கொதிப்பு.மாமனுர் நேற்று தடார் என்று விழுந்து, கை முறிந்து போனது. மூளையும் புரண்டு போனது.

வீரமுத்து : முன்னே கோவில் நுழைவு பற்றி ஹாஹு அம்பட்டேஸ்வாஹா என்று குமுறிக் கொண் டிருந்தாரே; அவர்தாமே.

ஜயராமன் : ஆம், ஆமாம்! ஐயோ அவர் பிடிவாத மூளை இப்போது வரவரக் கெட்டுப் போனது. எல்லாரையும் கொலை செய்வதாக அம்மிக் குழவியைத் தூக்குகிருர்...

வீரமுத்து : நெற்றிச் சுரப்பியான பிட்யூட்டரி கிளாண்டில் கோளாறு; நான் இதோ வருகிறேன். சரி உங்கள் திருமணம் என்னவானது?

ஜயராமன் : இவர் மூளை சரியானல் வேலை வரும். வேத வல்லி தயார்; டாக்டர், உங்கள் திருமணம்?

வீரமுத்து : மனம் பொருந்திஞல் மணம் பொருந்துவது இயல்புதானே! அதையும் விரைவில் காண் போம். நமக்கு டாக்டர் தர்மாம்பாள் இருக் கிருள். அவள் லண்டனிலிருந்து வந்ததும் திருமணம்.

நல்லாயி : மகனே, சுடச்சுடத் தோசை உள்ளது. அப்பா சாப்பிட்டுப்போ. ஐயா நீங்களும் வாங்க!

வீரமுத்து: மகிழ்ச்சியுடன் உண்கிறேன் தாயே! நமது சபதம் நிறைவேறியது தாயே! சிவமுருகன் வெற்றியீந்தான்,

[மேஜை மேல் பலகாரத்தட்டு வருகிறது "சிவமுருகா" என்று எல்லாரும் உண்ணல்]

## காட்சி: 14. டாக்டர் வீரமுத்து

[கனபாடிகள் மெத்தையில் படுத்திருக்கிறுர்.
கை வலி, கால் வலி.]

கனபாடி: ஐயோ! அம்மா! அப்பா! மீனுட்சி! இருக்கிருயா! போருயா! நானும் போகிறேன்.

வேதம்: அப்பா அமைதி! மீனுட்சி இருக்கிருள். நீயும் இரு. புலம்பாதே இதோ டாக்டர் வருகிருர்.

[டாக்டர் வீரமுத்து ஐயராமனுடன் வருதல்]

ஐயராமன்: மாமா, டாக்டர்.

கனபாடி: டாக்டரா வாருங்கோ இருங்கோ. கைவலி, கால்வலி, தலைவலி இடுப்புக் கடுப்பு! ஹூ ஹூ ஹூ! உயிர் துடிக்கிறது! வாய் கசக்கிறது! வலி வலி வலி.

டாக்டர்: எல்லாம் நன்ருகும். ஐயா அமைதியாயிரும் ஆண்டவன் அருள்வான். ஓம் சிவ முருகா! ஜயராம்,இவர் ஆடைகளைக் கழற்ற வேண்டும். பின் வேது வைக்கவேண்டும். ஓம் சிவமுருகா! தலையைத் தூக்கிப்பிடியும். முகத்தைத் துடைக்கிறேன். வேதம்மா வேது வைக்க உதவி செய்யும். கைக்குக் கட்டுப் போடுகிறேன். சிவா முருகா!

[கைக்குக் கட்டுப் போட்டு உடம்பில் வேது வைத்து; தலையில் மருந்து தடவி,

நெற்றியில் மருந்திட்டுக் கட்டிச் சிகிச்சை செய்தல்]

கனபாடி: ஹா, அப்பாடா நிம்மதியானது. டாக்டர் வாழ்க! ஜயராமா, மூளை தெளிந்தது. என்னவோ பிதற்றினேன். எல்லாம் மறந்துவிடு. வேததர்மத்தில் உள்ள ஆர்வத்தால் ஆவேசம் கொண்டு என்னென்னமோ உளறினேன். இப்போது மனம் குளிர்ந்தது. ஜயராமா, நீ உத்தமன். உனக்கே வேதம். நானேயே கலியாணம்.

டாக்டர்: அப்படிச் சொல்லும் நாலு தடவை. ஒரு சமூக நாடகம் நல்லபடி நிறைவேறியது.

கனபாடி: டாக்டர், நல்ல பரோபகாரி. முன் இப்படித்தான் டாக்டர் மாத்யூ இருந்தார்; மகா உத்தமர்; ஊருக்கு உபகாரியாயிருந்தார். நாங்களெல்லாம் அவரிடம் பிரியமாயிருந்தோம்.

வீரமுத்து: ஆம் அவர் ஹரிஜனுயிருந்து, கிறிஸ்துவரானுர். ஹரிஜனுயிருந்த வரையில், அவரைப் பறையன் என்று இழிவு செய்தனர். அதே ஆள் டாக்டா மாத்யூ ஆனதும் அக்கிரகாரமும் ஆதரித்துப் போற்றியது.

கனபாடி: அப்படியே! என் கண் இன்றே திறந்தது. சாதிப்பித்தம் ஒழிந்தது.

எல்லா வுயிர்க்கும் இறைவன் ஒருவனே
எல்லா வுடலும் இறைவன் ஆலயமே
எல்லா ருக்கும் இயல்பாம் இன்பம்
எல்லார் வாழ்வும் இறைவன் யோகமே

இந்த நாலு வரிதான் என்வேதம்—பட்டர் வருக!

[வருதல் பட்டர்]

பட்டர் : [திகைத்து] ஹா...

ஜயராமன் : என்னப்பா திகைக்கிறாய்?

பட்டர் : இவரை எப்போதோ—பார்த்த நினைவு

[மூளையைத் தட்டிக் கொண்டு]

ஜயராமன் : இவர் தானப்பா டாக்டர் வீரமுத்து M. D. நமது ஹரிஜன் சங்கத்தில் படித்து சீமை சென்று லண்டனில் M. D. பட்டம் பெற்று இங்கே மாவட்ட மருத்துவராயிருக்கிறார்.

பட்டர் : இவர் தாமே...முன்னே ஒரு பெண்ணுடன்.

ஜயராமன் ; கதையை நீட்டுவதேன் அப்பா, இவரே பையனாயிருந்தபோது தாய் நல்லாயியுடன் விறகு விற்க வந்தார். காலமுன்னேற்றத் தைக் கணமுன் காண்.

கனபாடி : அடடா வெடுக்கு துடுக்குப் பேச்சுக்காரனன அந்தப் பையன், லண்டன் டாக்டரானான, சந்தோஷம் அப்பா இப்படித்தான் எல்லாரும் முன்னுக்கு வரவேண்டும்.

பட்டர் : இதோ கோவில் பிரசாதம், சாப்பிட வேண்டும். டாக்டர் வாழ்க !

டாக்டர் : புனிதனானேன் வணக்கம், வணக்கம் ஐயா! கோவிலில் மீனாட்சி சுந்தரேசர் நன்றாயிருக் கிறார்களா?

பட்டர் : ஒரு குறையுமில்லை. இப்போதுதான் கோயில் சந்நிதி களை நிரம்பியுள்ளது. கனபாடிகளே மகிழும் போது...

கனபாடி : ஆமாம் டாக்டர், காலம் முன்னேறி விட்டது. பின் தங்கியவர்கள் விழித்தெழுந்து முன்னேறு கிறார்கள். தீண்டாமை வேண்டாமை.

ஜயராமன் : தீண்டாமையும் ஒழிந்தது ; தீட்டும் ஒழிந்தது; நேற்று வரைக்கும் சாம்பான சாமுவேல் ஆனால் அவனுக்கு மரியாதை. இருளன் இக்னேஷஸ் ஆனால் மரியாதை. காட்டேரி கரீம் சாகிப் ஆனால் மரியாதை—இந்துக்கள் இந்துக்களை மதிக்கும் காலம் வந்தது. இன்று சாம்பான் சாம்பானாகவேயிருந்து வாழலாம்.

கனபாடி : டாக்டர், இன்று மாறிப் பிறந்தேன்; காந்தியை அறிந்தேன். அந்த மகான் வாக்கே வேதம். நோக்கே போதம். வீரமுத்து, மாத்யூ ஆகாமல் டாக்டர் வீரமுத்து M. D. ஆகவேயிருந்தது பெரும்பேறு. மீனாட்சியம்மை இந்து மதத்தைக் காத்தாள். அவள் கருணையால் இது நடந்தது.

டாக்டர் : அவர் கருணையால் இன்னொன்று நடைபெற வேண்டும் ஐயா.

கனபாடி : என்ன? என்ன?

டாக்டர் : இதோ நிற்கிறார்களே வேதவல்லி ஜயராமர். இவர்களை நாளையே ஒன்றாக்க வேண்டும் அடுத்த தைக்கு உங்கள் பேரன் வந்து ஐம் என்று மடியில் உட்கார வேண்டும்.

கனபாடி : ஆ ஹா அது நடந்து விட்டது ; நடக்க வேண்டியது. ஹரிஜன சங்கத்திலேயே சுப காரியம் நடக்கட்டுமே. மனம் ஒத்துப்போனது; இனி மாமூல் கலியாணந்தானே !

வீரமுத்து : கலியாணச் செலவெல்லாம் என் பொறுப்பு. தை வெள்ளிக்கிழமை காலை எட்டு மணிக்கு முகூர்த்தம். மாலை ஐந்து மணிக்கு விருந்து, வரவேற்பு.

பட்டர் : நம : பார்வதீ பதயே !

எல்லாரும் : ஹர ஹர மஹா தேவ !

வேதவல்லி : உலகமெல்லாம் சாமி கோவிலே
உள்ளமெல்லாம் சந்நிதானமே
பலவுயிர்க்கும் ஒரு கடவுளே
பாருயிர்கள் ஒருயிரினம்
கலகமின்றி மனிதர் யாவரும்
கருணையன்பு காட்டி யோங்குவோம்
நலமெதென்றறிந்து நாடுவோம
நாடுமுற்றும் கூடி வாழுவோம் !

ஜயராம் : மேதினி மனிதர் யாவரும்—இங்கே
மேன்மையான பான்மை காட்டுவோம்
சாதி சமய பேதமில்லையே—ஆத்ம
சைதன்யத்தைச் சார்ந்துணருவோம்
ஓதியபடி ஒழுகுவோம்—நல்
லொழுக்கமே உயர்வு நல்குமே
நீதியான நேர் வழியிலே—என்றும்
நிலைத்து வாழும் கலை பயிலுவோம்

எல்லாரும் : ஓம் ஜய ஓம் ஜய ஓம்
ஓம் ஜோதி ஓம் ஜோதி ஓம் !
ஓம் சக்தி ஓம் சக்தி ஓம்
ஓம் சாந்தி ஓம் சாந்தி ஓம் !

## காட்சி : 15. திருமணம்

[ஹரிஜன சங்கம் மேடையில் மீனுட்சி, சுந்தரேசர் திருமணப் படம் அதற்குமுன் வேதவல்லியும், ஜயராமனும் திருமணக் கோலத்துடன் விளங்குகின்றனர். கெட்டிமேளம் மாலை மாற்றுதல்—மோதிரம் மாற்றுதல்]

[டாக்டர் வீரமுத்துவும், தருமாம்பாளும். மாலை மாற்றுதல்]

(ஆர்பி—ஆதி)

பெண்மையிற் சிறந்த உண்மைத் துணைவீ
ஆண்மைக் கேற்ற கேண்மையுடனே

மானே உன்னை மணந்து வாழ்வேன்
நீ என் சக்தி நானுன் சிவமே
குடும்பம் தழைக்கக் குவலயந்தழைக்க
அறம் பொருளின்பமும் அருளும் பொலிய
ஒன்ருய் இல்லறம் ஒளிபெற வாழ்வோம்

வென்றித் திருவே வீட்டிற்கரசியே
மன்றல் மாலை மணம்பெறச் சூட்டினேன்
மங்கலமாகுக நல்குல வாழ்வே
ஓம் சுத்த சக்தி ஜய சத்ய ஜோதி
ஓம் சச்சிதானந்த பரம க்ருபா நிதி

மணத்திரு : இருபாலுள்ளும் ஒரு தாளுகும்
இறைவா போற்றி எங்கும் நிறைவாய் !
இவரே என்னுயிர் இன்புறும் கணவர்
இவரே ஆணுடல் ஏந்திய நாளும்
இவரே என்றன் இதயத் துடிப்பாம்

என் மூச்செல்லாம் இவர்பணிக் கீந்தேன்
வடமீன் போன்ற திடமன துடனே
கற்பைக் காத்துக் கண்கருத்தொன்றி
யோகத் துணைவியாய் போகத் துணைவியாய்

இணை பிரியாமல் என்றும் வாழ்வேன்
ஆயுள் மலர்களை அன்பு மாலையாய்த்
தொடுத்திவர் மார்பிலே சூட்டுகின்றேனே
எனையிவர்க் கீந்தேன் இறைவா போற்றியே

பட்டர் :
கனபாடி : } நீடு வாழியரோ நீடு வாழியரோ
[அக்ஷதை போட்டு மலர் தூவி]

பீடுறு நம்பியும் பெட்புறு நங்கையும்
அன்பும் அறமும் அருளும் பெருகிப்
பண்பும் பயனும் பழுத்தினி தோங்கி
மங்கலமாக வாழ்க வாழ்கவே !

எல்லாரும்: உள்ளமே தில்லையாக
உயிர்தொறு நடனமாடும்
வள்ளலின் கருணையாலே
வளமையும் இளமையின்பும்
தெள்ளறிவாற்றல் யாவுந்
திருவுடன் பெருகி நாளும்
வள்ளியு முருகனும் போல்
வதுவரர் வாழ்க மாதோ!

[ஹரிஜன சங்கத்தார் இன்னிசை முழக்கம்]

சிந்து பைரவி ஆதிதாளம்

ப: வாழுவோமே அன்பு சூழுவோமே—இந்த
வானக்குடை நிழலில் ஆனந்தத் தோழராய் (வா)

அ: யாழும் குழலுமென வாழுவோமே—பொங்கும்
யாழித் திரையுடன் கூத்தாடுவோமே (வா)

ச: சாதிமதபேதமற நீதியமைப்போம்—இந்தச்
சகமெல்லாம் ஒருகுலமாகத் தழைப்போம்
வீதிதொறும் சுதந்தரவேதமொலிப்போம்—நம்
வீடுதொறும் கலைவிளையாடலுகப்போம் (வா)

பெண்மை பெருமைபெற வாழுவோமே—அச்சப்
பேயைத் துரத்தியுல காளுவோமே
உண்மை பெருமைபெற வாழுவோமே—இந்த
உலகிற் கலகமில்லா ஒற்றுமை கொண்டே (வா)

உன்னத ஒளியினில் ஓங்குவோமே—இந்த
உலகை அழகுபெறத் தாங்குவோமே
மண்ணுலகில் வானரசை நாட்டுவோமே—இந்த
மானிடத்தைத் தெய்வமென மாற்றுவோமே (வா)

# போர் ஏன்?

(கவியோகி சுத்தானந்த பாரதியார்)

போர் ஏனோ?—அக்கப் போர் ஏனோ?
பாராலயத்திலே ஓர்குல மாந்தர்கள்
பண்புடன் அன்புடன் நண்புடன் வாழ்ந்தால்
போர் ஏனோ?—இரத்தப் போரேனோ?

தீர்க்கதரிசிகள்—மார்க்க தரிசிகள்
சித்தர்கள் முத்தர்கள் எத்தனை வந்தனர்!
ஆர்க்கும் வேதமுறை ஆயிரம் ஆயிரம்!
அறிந்துநல் லருள்வழி அனைவரும் வாழ்ந்தால் ()

உள்ளத்தில் ஒன்றியே உலகினில் எல்லாரும்
உழைத்துப் பிழைத்தறம் செழித்துத் தழைந்திடின்
கள்ளஞ் செய் மனதினைக் கட்டிக் கருணையால்
கற்பகச் சோலைக் கனியென வாழ்ந்திடின் ()

ஆற்றினைப் போலே—ஊற்றினைப் போலே
ஆழியைப் போலே—ஆகாயம் போலே
காற்றினைப் போலே—கதிரினைப் போலே
காவினைப் போலே—பூவினில் வாழ்ந்தால் ()

சீவனிற் சிவமயம் கண்டிடும் சித்தாந்தம்
சிவமயச் சீவனைத் தெளிவிக்கும் வேதாந்தம்
தேவதேவனருளைத் தேடும் கிறிஸ் திஸ்லாமியம்
சீலமுள்ள பௌத்தம் செப்பியபடி வாழ்ந்தால் ()

அவரவர் நாட்டினை அவரவர் புரந்தே
ஆத்மநேய உரிமை பூத்துக் கனிந்திடவே
நவரச உலகியல் நாடகந் தனிலே
நான் அவன் என்கிற பான்மை யுணர்ந்தால் ()

மனப்போரே மிகச் சினப் போரனது
மனத்துக்கண் மாசறு மாண்வழி பற்றியே
இனப் போரின்றியே இயல்பாம் சமயோகம்
இலகிட உலகெல்லாம் இன்புற வாழ்ந்திடின்
போர் ஏனோ?—அணுப் போரேனோ?

---

சுத்தானந்தா அச்சகம், அடையாறு, சென்னை-20.